நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி: 2
தொகுதி: 112
திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்
விலை: ரூ.20
பிப்ரவரி-2018




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்ப முரளி** | உறுப்பினர் |
| பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறியாளர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

## பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. சிலப்பதிகாரப் புதையல்கள்
- குற்றம் உணரும் குணம் 7
- முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. திரிசொல் 10
- பேராசிரியர் செ.வை.சண்முகம்

4. உளவியல் பார்வையில் குறுந்தொகைப் பாடல்கள் 18
- பேராசிரியர் ப.மருதநாயகம்

5. சீவகசிந்தாமணியில் கற்பனை நயமும் வருணனைத் திறனும் 28
- முனைவர் உ.கருப்பத்தேவன்

6. சங்கச் செய்திகள் 38

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

## இதழ் மணம்

"ஆட்சிக்கட்டிலில் உள்ளார் மனச்சான்று கொண்டு தங்கள் கொலை கொள்ளை கொடுவினை ஆயவற்றை விட்டொழித்து தாம் இருக்கும் இருக்கைக்கும் கொள்ளும் பதவிக்கும், ஆளும் ஆட்சிக்கும் பெருமை சிறிதாவது உண்டாகச் செயல்படுவரா?"

மூதறிஞர் இளங்குமரனாரின் முதுமைப்பிதற்றல் இது. கற்றலும் கற்பித்தலும் எழுத்தும் வாழ்வுமூச்சாக வாழ்கின்ற சான்றோர் இளங்குமரனார்; அப்பெரியாருக்கு 2018 சனவரித்திங்கள் 30ஆம் நாள் 90 அகவை நிறைவுற்றது. நீண்ட நெடிய வாழ்க்கைப் பயணத்தில் தமிழ் மொழிக்கு ஆற்றிவரும் தொண்டினைப் பாராட்டிக் கொடுக்கும் பொருளினை அவர்கள் தனது எனப்போற்றாது அவற்றைத் தமிழ்ப்பணிக்குக் கொடுத்துவிடுகிறார்கள். பொருள் நசை என்பது அழுக்கு; தூய்மை எனப்படுவது அவா இன்மை; சிறுவயது முதல் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் தூய நெறிமுறை. அஃது அப்பெரியாருக்கு இயற்கையாக அமைந்தது. அது நிற்க. அப்பெரியாரின் முதுமைப்புலம்பல் என்ன?

பல்கலைக்கழகங்களில் முதன்மையராக இருக்கும் தகுதி கல்வியில் முதன்மை, நிர்வாக ஆளுமையில் முதன்மை எனத்தகுதி வாய்ந்த சான்றோர்களை இளமை தொடங்கிக் கண்டறிந்து மேலை நாடுகளில் அப்பெரும் இருக்கையில் அமர்த்துகிறார்கள். அவ்விருக்கையில் அமர்வதே தம்மோடு பணிபுரியும் சான்றோர் மதிப்பையும் தற்தகைமையையும் உடைய பெருமித வாழ்க்கையின் சிறப்பாகக் கருதப்படுகிறது.

நம் தேயத்தில் கல்விக்கழகங்கள் தேர்வுமுறையும் அமைப்புமுறையும் செப்பமுடையதாக இல்லை; பல்கலைக்கழகமானியக்குழு பெரும் ஊதியத்தை நிர்ணயம் செய்கிறது; ஆசிரியருடைய கல்விகற்றல் முறைக்கு அளவுகோல் இல்லை; கல்லூரியில் சேர்ந்துவிட்டால் ஓய்வுபெறும்வரை ஒரு கேள்வியும் இல்லை; அதனால் இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் வளர்நிலை பெறவில்லை. மேலைநாடுகளில் கல்வித்தரத்தை மேம்படுத்துவதில் கடும்போட்டி. கலிபோர்னியா தொழில் நுட்பப்பல்கலைக்கழகத்தில் இதுவரை 18 பேர் நோபல் பரிசு பெற்றுள்ளனர். அக்கம்பக்கத்தில் உள்ள பள்ளி

மாணவர்களை அழைத்துத் தங்கள் துறை சார்ந்த நுட்பங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். அதனால் எதிர்காலத்தில் மாணவர்கள் கூர்த்த மதிநுட்பத்தால் தங்கள் பல்கலைக்கழகத்தில் படிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பது பேராசிரியர்களின் விருப்பம். நோபல் பரிசு பெற்ற ஆசிரியர்கள் ஓய்வு நேரங்களில் பள்ளிக்கூடங்களுக்கு வந்து மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கிறார்கள்; ஆசிரியர்களுடன் கலந்துரையாடுகின்றனர். மேலைநாடுகளில் கல்வி குறித்த ஆர்வம் ஆசிரியர் மாணவர்களிடம் நிரம்பி இருப்பதால் அந்த நாடுகள் உலகில் பொருளாதாரம், சமூகவியல், மானிட ஒழுக்கம் எனப் பல்துறைகளிலும் முதன்மை பெற்று விளங்குகின்றன. இந்திய நாட்டில் முதலமைச்சர்கள், கல்வி முதன்மையர்கள் சிறைச்சாலைக்குச் செல்லும் அவலம்; மறுசீராய்வு செய்வது இன்றியமையாத தேவை. ஒருநாட்டின் வளர்ச்சி என்பது கல்வி, உடல்நலம் இவற்றைச் சார்ந்தது. ஆடம்ஸ்மித் என்னும் பொருளியல் ஆசிரியன் நிலம் பொருளின் அடிப்படை என்றான்; அது இப்போது பொய்த்து கல்வி, உடல்நலம் மிக்க நாடுகளே உலகில் முதன்மை பெற்று விளங்குகிறது.

பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்களுடைய திரிசொல் என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. பேராசிரியருடைய இக்கட்டுரை 'வடிவமைப்பு' கட்டுரையை எழுதுவதற்குரிய தயாரிப்பு, சிரத்தை ஆகியவற்றை ஆசிரியர்களும் மாணவர்களும் கூர்ந்து அறிதல் வேண்டும். இக்கட்டுரையை கட்டமைத்ததோடு அமையாது தன்னையொத்த பேராசிரியர் கி.நாச்சிமுத்து அவர்களிடம் படித்துக்காட்டியிருக்கிறார். இருபெரும் அறிஞர்கள் சந்திப்பு கல்வி சார்ந்த அவையமாக அமைந்திருப்பதை ஆசிரியர்கள் உணர்தற்பாலது. பல பேராசிரியப் பெருமக்கள் பெரும்பகுதி நேரத்தை வீண்பொழுதுபோக்கி வெற்றுரை ஆடுகின்றனர்.

பேராசிரியர் திரிசொல் குறித்த தொல்காப்பிய உரை ஆசிரியர்களின் உரைவிளக்கம் முழுமையாக அமையாதநிலையில் தொல்காப்பியம், திருக்குறள், பரிமேலழகர் உரை ஆகியவற்றுள் ஆழங்கால்பட்ட தம் அறிவு நுட்பத்தால் விளக்கும் திறம் நவில்தொறும் இன்பம் தருகிறது. திருக்குறளுக்கு இரண்டுவரியில் உரை எழுதுகிறார்கள்; பரிமேலழகர் உரை பேரா.செ.வை.சண்முகம் போன்ற அறிஞர் விளக்கத்தால் திருக்குறளின் உயிர்செழிப்புறுகிறது. கட்டுரையை

எத்தனைமுறை வேண்டுமானாலும் படிக்கலாம். இன்பப் பெருக்கமே; இன்பம் என்பது அறிவின்பேறு. செய்யுள் மொழியின் சிறப்புப் பண்பாக ஜீவிதம் அதாவது உயிர் என்றும், சேனாவரையர் கட்டிய வழக்கு என விளக்குவதும் இலக்கிய பயிற்சிக்குரியதாகும்.

"உளவியல் பார்வையில் குறுந்தொகைப் பாடல்கள்" என்னும் பேராசிரியர், ப.மருதநாயகம் அவர்களின் கட்டுரையின் தொடர்ச்சி இவ்விதழில் இடம்பெறுகிறது. குறுந்தொகையில் உள்ளத்தின் வெளிப்பாடாகக் காதல்மொழி கவிஞர்களின் சொற்களில் வெளிப்படுவது பேராசிரியரின் தோய்ந்த கல்விப்புலத்தில் கற்று இன்புறத்தக்கது. தலைவியைச் சூழ்ந்த இனமாகிய தோழி, செவிலி, நற்றாய் என அனைத்துச்சுற்றமும் காதல்நலம் விரும்பினும் தலைவியும் தலைவனும் உள்ளத்து உணர்வுகளால் தவிக்கும் தவிப்பு அடிநாதமாக ஒலிப்பதை ஆசிரியர் காட்டும் உளவியல்நெறி தனித்தன்மை வாய்ந்தது. அன்பின் பல்வேறு கூறுகளை குறுந்தொகை ஆசிரியர்கள் கவிதையின் சிறு சிறு தொடர்களில் இயற்கையின் பின்புலத்தில் கட்டமைத்திருப்பதை "நிரைகோல் குறுந்தொடி" போன்ற சிறுசிறு தொடர்களில் காதல் நெஞ்சை குறுந்தொகை ஆசிரியர் புலப்படுத்தி இருப்பதை ஆசிரியர் ப.மருதநாயகம் நுண்ணிதின் உணர்ந்து கற்போர் உளம் கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தியிருக்கிறார். காட்சி என்பது கற்பவர்களுக்குத் தலைவன், தலைவி, பாங்கன், தோழி, செவிலித்தாய் அனைவரையும் நம் கண்முன் கொண்டுவந்து நம் உள்ளத்திரையில் அனுபவப்படுத்து வதாகும். புலன்நுகர் காட்சிகள், திரைப்படம், தொலைக்காட்சி என்பன புலன்களைச் சோர்வடையச் செய்யும்; மனத்திரையில் ஆசிரியர் படைக்கும் காட்சி பேசும்படமாக அமைந்திருப்பதை (Talking Picture) கற்போர் உணரலாம்.

சென்ற இதழின் தொடர்ச்சியாக இவ்விதழில் நான்காவது கட்டுரையாக அமைவது முனைவர் உ.கருப்பத்தேவன் அவர்களின், "சீவக சிந்தாமணியில் கற்பனை நயமும் வருணனைத்திறமும்" என்ற கட்டுரை ஆகும். சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவரின் கற்பனைக் காட்சிகளையும் வருணனைத் திறத்தையும் நச்சினார்க்கினியர் உரைவழி சில மேற்கோள்களைப் புலப்படுத்தி இருப்பது பாராட்டுக்குரியது.

# சிலப்பதிகாரப் புதையல்கள்

## குற்றம் உணரும் குணம்

8

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

தம் குற்றம் உணர்வார் அரியர்; அறியவல்லார் பெரியர்!

நற்குணங்களுக்கு உரியரும் அவர்.

அந்நாள் முறையில் பன்மணமுறையும், வைப்புமுறையும் பெருக இருந்தமை பிரிவுகளில் ஒன்றாகப் பரத்தையிற் பிரிவு கூறியது புலப்படுத்தும். வேந்தர், செல்வர் மனைவியர் ஒருவரே எனல் எண்ணித்தான் பார்க்கவேண்டும்.

கோவலன் மாதவியிடம் சேர்ந்தமை குற்றமாக அந்நாளில் கருதினார் அல்லர். மாதவியைப் பிரிந்ததும் பிறர்க்குக் குற்றமாகத் தோன்றுதல் இல்லை. ஆனால் மாதவியைக் குற்றம் காட்டித் தான் குணவான் போலப் பழித்தமையும் பிரிந்து வந்தமையும் குற்றமேயாம் என்பதை அவன் பின்னே உணர்கின்றான்.

கோசிகமாமணி என்பான் வழியாகக் கடிதம் கண்ட கோவலன் அக்கடிதத்தையே தான் தன் பெற்றோர்க்கு விடுத்தது அவள் குற்றமற்றவள்; தானே குற்றவாளன் என்பதை ஒப்பியதாம்! அன்றியும்,

*"தன்தீது இலளெனத் தளர்ச்சி நீங்கி*
*என்தீது என்றே எய்தியது உணர்'ந்தான்!*

இவ்விடம் ஒன்றுமட்டுமா? கவுந்தியடிகளிடம்,

*"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி*
*நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த*
*அறியாத் தேயத் தாரிடை யுழந்து*
*சிறுமை யுற்றேன்"* (14:17-20)

என்று தன் குறையுணர்ந்து பணிந்துருகி மொழிகின்றான். கண்ணகியாரிடம்,

*'வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு*
*குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்*
*பொச்சாப்பு உண்டு பொருளுரை யாளர்*
*நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ?*

*இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்*
*சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்*
*வழுவெனும் பாரேன்"*

*எனக் கனிந்துருகி மொழிகின்றான்!*

இவ்வாறு தம் குற்றம் உணர்வார் மாந்த நிலையில் ஓங்கிய பண்பினராம்!

தேவியின் காற்சிலம்பு நீ கூறிய கள்வன் கையகத்தது எனின்

*"கொன்றச் சிலம்பு கொணர்க"*

என்று அறங்காக்க வேண்டிய அரசன் பெரும்பழி செய்தவனே!

ஆனால்,

*'தேரா மன்னா'*

என்று கூறி நிற்கும் ஒருத்தியைக் குற்றமாக நோக்காமல் அவள் கூறுதற்குரிய செவ்வியும் - செவியும் - தந்து

*"தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி*
*யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே"*

என்று முடிமன்னன் ஒருவன்வாய் மொழியுமா? உடனே சிலம்பை வருவித்துக் குற்றம் சாற்றியவரிடமே அச்சிலம்பை ஒப்படைத்து உண்மை அறிய ஒவ்வுமா?

உடைத்த சிலம்பில் மணியைக் கண்டு உடனே,

*"யானோ அரசன் யானே கள்வன்*
*கெடுக என் ஆயுள்"*

என்று தனக்குத் தானே தண்டனை தந்து கொள்வானா?

*"இழைத்த திகவாமைச் சாவாரை யாரே*
*பிழைத்தது ஒறுக்கிற் பவர்"*

என்பது வள்ளுவமாணறம் ஆயிற்றே!

பாண்டியன் இழைத்த குற்றத்திற்கு அவனே உணர்ந்து தன்னைப் பலியிட்டுக் கொண்டதும், தேவி வீழ்ந்து அவனொடு தொடர்ந்ததும் கண்ணாரக் கண்டும் வஞ்சினம் கொள்ளலும் ஊரை அழற்படுத்தலும் தகும் செயலா? தான்படு துயர்க்காக எரியுண்ணச் செய்தல் நடுவுநெறி என உலகம் கொள்ளுமா?

*ஆனால் அவரே உணர்ந்து தாம் செய்ததற்கு வருந்தித்*

***"தீத்தொழி லாட்டியேன்"***

என்று வேலான் குன்றில் வேங்கையின் கீழ் நின்று உரைத்தது அவர் குற்றம் உணர்ந்தது அல்லவா! அவரே,

***"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்***

***நல்விருந்து ஆயினான் நானவன் தன்மகள்"***

என்று செங்குட்டுவர்க்குச் சொல்வாரா?

வஞ்சி மகளிர்,

***"தென்னவன் தன்மகளைப் பாடுதும் வம் எல்லாம்"***

என்று பாடும் சிறப்பு, குற்றம் உணர்ந்த குணத்தின் சிறப்புத்தானே!

தம் குற்றம் நோக்கவே நோக்காமல் பிறர் குற்றமே நோக்கி அதனைப் பருக்க வைத்து விண்ணில் புடைப்பானாய்ப் பருக்கவிடும் அரசியலாரும் அறிவாளியரும் பொதுமக்களும் தீராக் கேடாக நலிந்துவரும் காலநிலையில், சிலம்பில் வரும் இம் முப்பெருங் காட்சிகள் எவ்வளவு அரியவை.

குடிநலன் காப்பார் கோவல கண்ணகியர் போல்

தம் குற்றம் உணர்ந்து திருந்துவரா?

ஆட்சிக் கட்டிலில் உள்ளார் மனச் சான்று கொண்டு தங்கள் கொலை கொள்ளை கொடுவினை ஆகியவற்றை விட்டொழித்துத் தாம் இருக்கும் இருக்கைக்கும் கொள்ளும் பதவிக்கும், ஆளும் ஆட்சிக்கும் பெருமை சிறிதாவது உண்டாகச் செயல்படுவரா?

ஏங்குதற்காகவா இலக்கியம்?

ஏற்பதற்காகவா இலக்கியம்?

**மன்னர் பாசுகர சேதுபதியைப் புகழ்ந்து சுவாமி விவேகானந்தர் அருளிய அருளுரை**

"என்னால் ஏதாகிலும் நல்ல காரியம் நடந்திருக்குமேயானால் அவை அனைத்திற்கும் காரணமானவர் மன்னர் பாசுகரசேதுபதி அவர்களே ஆவார். இந்த நாடே அவருக்குக் கடமைப்பட்டு இருக்கிறது. அவர் துறவியாக இருக்க வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம். அதற்கேற்ற எல்லாத் தகுதியும், அவரிடத்தில் இருக்கின்றன." மன்னர் பாசுகர சேதுபதி அவர்களுக்கு "ராஜ ரிஷி" என்ற பட்டத்தையும் வழங்கினார்.

- சுவாமிஜி

# திரிசொல்

**பேரா.செ.வை.சண்முகம்,**
மொழியியற்புலம், (பணி நிறைவு)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
சிதம்பரம்.
கைபேசி: 9865196476.

'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' என்று தொல்காப்பியப் பாயிரம் கூறியபடி, தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களிலும் செய்யுள் மொழி பற்றிய பல கருத்துகளைக் கூறியிருப்பது மொழியியல் இலக்கியத் திறனாய்வில் கவனம் பெற்றதோடு எழுத்து, சொல் அதிகாரங்களில் கூறிய செய்திகள் தனியாகவும் ஆராயப்பட்டுள்ளது (சண்முகம், 2014:40-51). அவைகளில் சொல்லதிகார எச்சவியலில்(1)செய்யுள் ஈட்டச் சொற்களாகக் கூறிய இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன (சண்முகம் 1984:65-113). இருந்தாலும், அவைகளில் ஒன்றான திரிசொல் இங்கு மறுஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

**திரிசொல்லின் இலக்கணம்**

*'ஒருபொருட் குறித்த வேறுசொல் லாகியும்*
*வேறுபொருட் குறித்த ஒருசொல் லாகியும்*
*இருபாற்று என்ப திரிசொல் கிளவி'* *(எச்சம்.3)*

என்பது. அடிப்படையாக ஒரு பொருள் பல சொல் என்பது பூ, மலர் என்பவை. பல பொருள் ஒரு சொல் என்பது பார் என்பது பார்த்தல் (வினை), உலகம் (பெயர்), முயல் (செய்து பார், துணைவினை) முதலியவை.

இவை எப்படி திரிசொல் ஆகும் என்ற கேள்விக்கு, 'ஒரு கூறு நிற்ப ஒரு கூறு திரிந்தன' (கிள்ளை/கிளி, மஞ்ஞை/மயில் என்பவை) இளம்பூரணரின் உதாரணம். 'முழுவதும் வேறுபட திரிந்தன' (மலை/அடுக்கல்) என்ற அவருடைய கருத்தைச் சிறிது மாற்றி எல்லா உரையாசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

தொல்காப்பியமே உரியியலில் (1.4-5) பல பொருள் ஒரு சொல், ஒரு பொருள் பல சொல் என்ற இந்த இரண்டு வகையும் குறிப்பிட்டுள்ளதால், இது எல்லாச் சொற்களுக்கும் பொருந்தும் என்று ஆகிறது. அதாவது இயற்சொல், திசைச்சொல், வட சொல்

ஆகியவற்றுக்கும் பொருந்தும். அப்படியானால் அது திரிசொல்லின் இலக்கணமாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே இந்தச் சூத்திரம் சேனாவரையர் கருத்துப்படி 'திரிசொல்லுக்கு இலக்கணம் கூறுவது அன்று; அதன் பாகுபாடு உணர்த்துவது' ஆகும்.

தெய்வச்சிலையார் உரிச்சொல் சொன்ன வகைப்பாடு குறைச்சொல்லாக வருபவை; இங்குக் கூறியவை முழுச் சொல்லாகி வருபவை என்று வேறுபடுத்தி நியாயப்படுத்தியுள்ளார். அதாவது பெயர், வினை, இடை, உரி என்பவைகளில் இடைச்சொல் என்பது விகுதிகள் (வேற்றுமை உருபுகள், கால விகுதி, பெயரிலும் வினை வரும் திணை - பால் விகுதிகள், இட (தன்மை, முன்னிலை) விகுதிகள், சில சொற்கள் (தஞ்சம், மன்ற போன்றவை) ஆகியவைகளையும்; உரிச்சொற்கள் என்பது பெயரடையாகவும் உறு, (உறு பொருள்), தவ (தவப்பல) வினையடையாகவும் (நனி சிறந்தது) வரும் சொற்களையும் குறிக்கும். அந்த உரிச்சொற்கள் வேறு எந்த விகுதியையும் (அதாவது ஏ, ஓ போன்றவை) ஏற்காதவை ஆகும். ஆனால் திரிசொல், பெயராகவும் (கிளி, கிள்ளை), வினையாகவும் (உண், தின்) பெயரும் வினையாகவும் (பார், உலகம், பார்த்தல்), இடைச் சொல்லாகவும் பிரிநிலை, வினா, எதிர்மறை) அமையும். அப்படியானால் செய்யுள் ஈட்டச் சொல்லின் வகையாகத் திரி சொல்லைக் கூறியதன் சிறப்பு என்ன? என்ற கேள்வி எழுகிறது.

சேனாவரையர் 'திரிசொல்லது திரிவாவது உறுப்புத் திரிதலும் முழுவதும் திரிதலும்' என இருவகைத்து. கிள்ளை, மஞ்ஞை என்பன உறுப்பு திரிந்தன. விலங்கல், விண்டு என்பன முழுவதும் திரிந்தன. முழுவதும் திரிந்தனவற்றைக் கட்டிய வழக்கு என்பாரும் உளர். அவை கட்டிய சொல்லாயின் செய்யுள் வழக்கு ஆமாறு இல்லை; அதனான் அவையும் திரிசொல் எனல் வேண்டும்' என்று முதலில் கூறிவிட்டு, 'திரித்துக் கொண்டது இயற்கைச் சொல்லான் இன்பம் பெறச் செய்யுள் ஈட்டாமை ஆகாமையான் அன்றே? அதனான் திரிசொல் எனவே செய்யுட்கு உரித்தாதலும் பெறப்படும்' என்று இறுதியில் கூறிய கருத்தும் விளக்கத்துக்கு உரியது. இங்கு இரண்டு கருத்துகள் முக்கியமானவை:

i.கட்டிய சொல்லாயின் செய்யுள் வழக்கு ஆமாறு இல்லை.

ii.இயற்சொல்லால் செய்யுட்கு இன்பம் தரமுடியாததால் திரிசொல் செய்யுளுக்கு உரியது.

முழுவதும் திரிந்தவைகளைக் கட்டிய வழக்கு என்று கொள்வது என்பதற்கு அவர் காட்டிய உதாரணம் விவாதத்துக்கு உரியது. ஏனெனில் விலங்கல், விண்டு என்பவை மொழியில் இயல்பாய் அமைந்தவை; கட்டிய வழக்கு இல்லைதான். அப்படியானால் கட்டிய வழக்காக உள்ள திரிசொல் கண்டறிய வேண்டும்.

இலக்கிய மொழியைக் கவனமாகப் பார்க்கும் போது திட்டமிட்டுச் சொற்களின் பொருள் மாற்றம் காணப்படுவது அறியத் தகுந்தது.

'தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே / நாவினாற் சுட்ட வடு' என்ற குறளில் (129) முதலில் 'சுட்ட' என்பது 'தீயினாற் சுட்டது' என்பதால் இயல்பான வழக்கு நேர்ப் பொருள். இரண்டாவது 'நாவினாற் சுட்டது' என்பது இயல்பு இல்லை, எனவே பரிமேலழகர் 'தீயும் வெவ்வுரையும் சுடுதல் தொழிலால் ஒக்கும். ஆயினும் வெவ்வுரை கொடிது என்பது போதரல்' என்ற விளக்கம். எனவே 'நாவினாற் சுட்ட' என்பது 'கொடிய வெவ்வுரை சொல்' கேட்டவர் உள்ளத்தைப் பாதிப்பதைக் குறிக்கும். எனவே, அதன் பொருள் வேறு; அது வரும் சூழலால் அமைகிறது. உண்மையில் புதிய சூழல் மூலம் புதிய பொருள் வாசகரை ஊகிக்கும்படி விடப்பட்டுள்ளது. எப்படியானாலும் 'சுட்ட' என்பது ஒரு பொருள் ஒரு சொல்லாக இருந்தது பல பொருள் பல சொல்லாக மாற்றம் பெற்றுத் திரிக்கப்பட்டுள்ளது என்ற முறையில் திரிசொல் என்ற பண்பைப் பெறுகிறது. உண்மையில் கருத்தில் ஒற்றுமை இருப்பதைச் சொல்லாலும் ஒற்றுமை இருப்பதாகக் காட்டும் கவித்திறன் இது. அதற்கு மேலாக அதன் பயனை மிகைப்படுத்த 'வடு' என்று கையாளப்பட்டுள்ளது. வடு என்பது பல பொருள் ஒரு சொல்லாக இருந்தாலும் இந்தச் சூழலில் தழும்பு என்ற பொருள் உடையது. அதன் பொருள் உள்கிடை விளக்கத்துக்கு உரியது.

தீயால் சுட்டதன் பலன் புண் உண்டாதலே இயல்பு. பெரிய புண்ணாக அமைந்தால்தான் கொஞ்ச நாளைக்குப் புண் ஆறி பிறகே, தழும்பாக மாறும். எனவே வடு என்பதைப் பயன்படுத்தியதன் மூலம் அதன் தாக்கம் அதிகம் என்பதும் அதிகக் காலக்கெடு உடையது என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அதிக மனத்துன்பத்தோடு அது பல காலம் மனதில் தங்கியிருக்கும் என்பதன் குறியீடாக 'வடு' இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதை இலக்கண மரபில் உருவகம் என்று கொள்ளலாம். இது ஒரு வித மொழி நடை.,

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்/ சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ற குறளில்(69) 'ஈன்ற' என்பது நேர்ப்பொருள். ஆனால்

'சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு/ஆக்கம் எவனோ உயிர்க்கு' என்ற குறளில் (31) ஈனும் என்பதற்குத் 'தரும்' என்று பரிமேலழகர் உரை எழுதியுள்ளார். எனவே ஈன் என்பது 'பெற்றெடுத்தல்', 'தருதல்' என்ற இரண்டு பொருளை உடைய பல பொருள் ஒரு சொல் ஆகிறது. இன்னொரு நிலையில் தருதல், ஈனுதல் என்பவை ஒரு பொருள் பல சொல் ஆகின்றன . எனவே 31ஆவது குறளில் வரும் ஈனுதல் திரிசொல்லாகவும் கையாளப்பட்டுள்ளது என்று ஆகிறது. உண்மையில் ஈனும் என்பது உறுதியாகத் தரும் என்ற நுண் பொருளும் உடையது.

'மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க/ துன்பத்துள் துப்பாயார் நட்பு' என்ற குறளில் (106) கேண்மை, நட்பு என்ற இரண்டும் இயல்பான ஒரு பொருள் பல சொல். அதனால் மறவற்க/ துறவற்க என்பவையும் இந்தக் குறளில் பல சொல் ஒரு பொருள். பரிமேலழகர் இந்த இரண்டு சொல்லுக்கும் 'ஒழிக' என்று பொருள் எழுதியிருப்பதும் இந்த உண்மையை வலியுறுத்தும். அப்படியானால் துறத்தல் என்பது 'பிரிதல்' என்ற பொருள் உடைய சொல், 'ஒழிதல்' என்ற பொருளும் உடையதாக அமைவதால் பல பொருள் ஒரு சொல் என்று ஆகித் திரிசொல்லாக அமைகிறது. அதற்கு ஒரு காரணம் ஒலி நயம் மிகுவிப்பதே. 'மறவற்க மாசற்றார்' என்பது போல் 'துறவற்க/ துன்பத்துள் துப்பாயார்' என்று வருவது ஒரு காரணமாக இருக்கலாம்.

மேலும் துப்பு என்பதற்குப் பற்றுக்கோடு என்று பொருள். துப்பு என்பது ஒரு சொல் பல பொருளை உடையது. அவைகளில் ஒரு பொருள் வலிமை என்று சங்க இலக்கியத்திலும் (அகநானூறு 105.11) பயின்றுள்ளது. அந்தப் பொருளே பற்றுக் கோடு அல்லது ஊன்றுகோல் என்ற பொருளில் இங்கு அமைந்துள்ளது. அது எப்படி அமைந்தது என்று பார்க்க வேண்டும். பற்றுக் கோடு=காரணம், காரியம்=வலிமை. இங்கு காரியம் காரணத்துக்கு ஆகி வந்துள்ளதால் காரிய ஆகுபெயர் என்ற முறையில் பொருள் திரிந்து திரிசொல் என்று கொள்ளலாம்.

கடவுளைக் குறிக்கும் சொற்களாகத் திருவள்ளுவர்,

ஆதிபகவன் (1), வாலறிவன் (2) மலர்மிசை ஏகினான் (3) இறைவன் (5), அறவாழி அந்தணன் (8), எண்குணத்தான் (9) ஆகியவைகளை ஒரு பொருள் பல சொல்லாகப் படைத்துக்கொண்டுள்ளார். அவை கடவுளின் பண்புகளை விளக்குபவை. அவை ஒரு பொருள் குறித்த வேறு சொற்கள் என்ற நிலை பெற்றுச் செய்யுளில் திரி சொற்களாக அமைகின்றன. மாதர், மடந்தை, பெண் ஆகியவை இயல்பான பல

சொல் ஒரு பொருள்; மாறாகத் துறந்தார் (22), அறம் பூண்டார் (23), ஐந்தவித்தான் (25) , நிறைமொழி மாந்தர் (28) , அந்தணர் (30) என்ற சொற்கள் நீத்தார் என்பதன் பல சொல் ஒரு பொருளாக நீத்தார் பெருமை அதிகாரத்தில் வள்ளுவர் படைத்த திரி சொற்களாகக் கொள்ளலாம். அதாவது செய்யுள் மொழி சில சிறப்புப்பண்புகளை உடையது. அவைகளில் ஒன்று திரிசொல், அது கவிஞன் படைப்பு ஆகும்.

நச்சினார்க்கினியர் திரி சொற்களுக்கு உதாரணங்களாகப் பெயர், வினைச் சொற்களைக் கொடுத்துவிட்டுப் 'பைங்கண், பைந்தார், பச்சிலை ஆகிய பண்புத் தொகைச் சொற்களைக் கொடுத்து அவை பசுமை என்று பண்புப் பெயராக நிறுத்தி அவை அடைந்த புணர்ச்சி மாற்றங்களாகப் பின்னுள்ளோர் (அதாவது நன்னூலார்) சந்தி முடிக்கின்றது பொருந்தாது. என்னை? பைங்கண் என்புழிப் பசுமையாகிய கண் எனத் தாம் தொகுத்த பண்புப் பெயரை விரித்தல் அன்றி பசுமைக்கண் எனத் தாம் தொகுத்த பண்புப் பெயரை விரித்தல் ஆகாமையின், இவை செய்யுட்குப் புலவர் சிறிது நிறப்பத் திரித்துக் கொண்ட பெயரெச்ச வினைக்குறிப்புப் பெயர் என்று உணர்க. எழுத்ததிகாரத்துச் செய்யுட்கு இவ்வாறு முடிக்க என ஆசிரியர் முடிபு கூறியவற்றை எல்லாம் 'செய்யுள் முடிபு' எனக் கூறலும் வழக்குச்சொல். இவ்வாறு திரிந்து வருவனவற்றை 'வினைத் திரிசொல்' என்று கூறுலும் ஆசிரியர் கருத்தாம்' என்று கூறிய விளக்கத்தில் முக்கியமாக மூன்று கருத்துகள் அமைந்துள்ளது கவனிக்கத் தகுந்தது: i.பைங்கண் என்பது நிலை மொழி வடிவம் பசுமை என்பது தவறு. அது பெயர்ச்சொல். ஏனெனில் அது கண்ணின் பண்பைக் குறிப்பதால் பசியதாக என்று நிலைமொழி இருக்க வேண்டும். ii. பசியதாக கண் எப்படி பைங்கண் என்று திரிந்ததற்கு விளக்கம் புலவர் சிறிது நிறப்பத் திரித்துக் கொண்ட சொல் அதாவது திரி சொல். அதற்கு இலக்கணம் 'எழுத்ததிகாரத்துச் செய்யுட்கு இவ்வாறு முடிக்க' என்று தொல்காப்பியரே கூறியுள்ளது. அதாவது எழுத்திகாரத்து இறுதி சூத்திர அடியான 'கிளந்த அல்ல செய்யுளுள் திரிந' ( 483.1) என்பது. iii. எனவே பசியதாக கண் என்பதை பைங்கண் என்று புலவர் செய்யுளுக்காகத் திரித்துக் கொண்ட சொல், சொல் என்பது அவருடைய விளக்கம். இது சிறப்பான விளக்கம் இல்லை. உண்மையில் அதன் நிலைமொழி வடிவம் பசும் என்பதே. சங்க காலத்தில் பெயர்ச் சொற்கள் பெயரடை வடிவம் பெறுவது இயல்பானது. ஒன்று, இரண்டு முதலிய எண்ணுப்பெயர்கள் ஒரு/ஓர், இரு/ஈர் என்றும் பத்து என்பது பது/பஃது/ பதின்/பன்/நூறு (தொண்ணூறு) என்று மாற்று

வடிவங்களைப் பெற்று வரும். அந்த முறையில் பசுமை என்பதன் ஒரு மாற்று வடிவம் பசும் என்பது அது பைம் என்று மாறியுள்ளது. மாற்று வடிவங்களைத் திரிந்த சொல்/திரி சொல் என்று கூறுவது பொருந்தாது.

தொல்காப்பியமே செய்யுள்மொழி இயற் சொற்களிலிருந்து அடையும் மாற்றங்களைக் குறிப்பிட்டது. அவை ஒலிநயத்துக்கும் அதாவது தொடை நயத்துக்கும் கருத்து அழுத்தத்திற்கும் உதவுவது கண்டறியப்பட்டுள்ளது.

தொல்காப்பியமே எச்சவியலில் செய்யுள் ஈட்டச் சொற்களைத் தொடர்ந்து செய்யுளில் வரும் சொல்லெழுத்து மாற்றங்களை 'அந்நாற் சொல்லைத் தொடுக்குங்காலை/வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும் வழி மெலித்தலும்' (எச்சம்.7) என்று விளக்கியுள்ளார். 'அந்நாற் சொல்லைத் தொடுக்குங்காலை' என்பதால் அவை செய்யுளுக்கு உரியது என்பது பெறப்படுகிறது. வல்லெழுத்து மாற்றம் (மெல்லினம் வல்லினம் ஆதல்), மெல்லெழுத்து மாற்றம் (வல்லினம் மெல்லினம் ஆதல்) விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்று ஆறு நாலு மாற்றங்களைக் குறிப்பிட்டுள்ளது. அவைகளை யாப்பருங்கலவிருத்தி (45.2) செய்யுள் விகாரம் என்று கூறியதை ஒட்டி உரையாசிரியர்களும் விகாரம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

குறுங்கை என்பது குறுக்கை என்று ஐங்குறுநூற்றில் (266.2) 'சிறுகட் பன்றி...../ குறுக்கை இரும்புலி') வந்துள்ளது வலித்தல் விகாரம். எனவே குறுங்/குறுக் ஒரு பொருள் பல சொல் என்று கொண்டு உறுப்பு திரிந்ததாகக் கொள்ளலாம். குற்றியலுகரம் என்பதைத் தொல்காப்பியரே குன்றியலுகரம் (ஒன்றறி கிளவி....... / குன்றியலுகரம், கிளவியாக்கம், 8) என்று பயன்படுத்தியுள்ளார். அது தொடை நயம் என்ற கவிதை நோக்கு உடையது.

திருக்குறளில் (524) பெற்றதால் என்பது முற்று எதுகைக்காகப் பெற்றத்தால் என்று அமைந்துள்ளது. 'சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான் / பெற்றத்தால் பெற்ற பயன்'. முன் அடியில் சுற்றத்தால் என்பது இயல்பு வழக்கு. ஒலிநயம் அமைய அதாவது அடி முற்றுஎதுகை அமைய பெற்றதால் என்பது பெற்றத்தால் என்று திரிக்கப்பட்டுள்ளது.

குன்றியலுகரம்/குற்றியலுகரம் ஆகிய இரண்டும் ஒரே பொருள் உணர்த்துவதால் மேலே கூறியபடி பல சொல் ஒரு பொருள் என்று கொண்டு உறுப்பு திரிந்ததாகக் கொள்ளலாம். இவை ஒரு வகையில் கட்டிய வழக்கு என்று கொள்ளலாம் தொல்காப்பியர் எச்சவியலில் பல

சூத்திரங்களில் செய்யுள் மொழியில் மட்டும் அமையும் சிறப்பு மாற்றங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

'இரப்போர் கையுளும் போகிப்/புரப்போர்புன்கண் பாவைசோர' (புறநானூறு. (235. 11-12) என்பதில் புரப்போர் என்பது தன்வினை செய்வினை. ஆனால் பிறவினை அதாவது செயப்பாட்டு வினையாக அமைந்துள்ளது. அதனால் 'தன்னால் புரக்கப்படும் சுற்றத்தார்' என்று உரை எழுதப்பட்டுள்ளது. அதைச் சொல்லியல் விகாரம் எனலாம். பொது நிலையில் புரப்போர் என்பது ஒரு பொருள் ஒரு சொல்லாக இருந்தது, இந்தப் பாட்டில் ஒரு சொல் பல பொருளாக மாற்றம் பெற்றுத் திரிசொல் நிலையை அடைந்துள்ளது.

பொதுவாக எல்லாமொழியிலும் மூவிடப்பெயருக்குப் பின்னரே எண்ணுப்பெயர் வரும். நாம் இருவர், நீ ஒருத்தி என்று அமையுமே தவிர எண்ணுப்பெயர் அடையாக மூவிடப்பெயருக்கு முன்னால் வராது. இரு நாம், ஒரு நீ என்று வராது, ஆனால் குறுந் தொகையில் (6.4) 'ஓர் யான் (மன்ற துஞ்சாதானே') என்று வந்துள்ளதைத் தொல்காப்பியம் செய்யுள் மொழியில் அப்படி வரலாம் என்று இலக்கணப்படுத்தியுள்ளது (கிளவியாக்கம் 30) என்று ஆகும். அதன்படி சொல்கிற கருத்து அழுத்தம் பெறும். இது தொடரியல் விகாரம் ஆகும். அவைகளைப் புலவர்கள் செய்யுள்மொழியில் செய்த கட்டிய வழக்கு என்றும் கொள்ளலாம்.

பொதுவாக எல்லா மொழியிலும் இயற் பெயருக்குப் பின்னரே சுட்டுப் பெயர்கள் (அவன், அவள் முதலியன (Demonstrative personal pronouns) வரும். கண்ணன் வந்தான். அவன் ஒரு நூல் கொடுத்தான் என்பதே இயல்பான வழக்கு.தொல்காப்பியமும் கிளவியாக்கத்தில் (36) 'இயற்பெயர்கிளவியும் சுட்டுப்பெயர்க்கிளவியும்/வினைக்கு ஒருங்கியலும் காலம் தோன்றின்/சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்/இயற்பெயர் வழிய என்மனார் புலவர்' என்று கூறிவிட்டு அடுத்த சூத்திரத்திலேயே 'முற்படக் கிளத்தல் செய்யுளுள்ளே' என்று கூறியுள்ளதும் ஒரு வகையில் திரி தொடராகக் கருதலாம். அதுகொல்தோழி காம நோயே.... பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே (குறுந்தொகை 5.1,5). இது வாசிப்பவரின் ஆர்வத்தைத் தூண்டித் தொடர்ந்து கேட்க, படிக்கத் தூண்டும் ஒரு கருத்தாடல் உத்தி ஆகும். எனவே திரி சொல் செய்யுள் மொழியின் ஒரு சிறப்புப் பண்பு என்பதால் செய்யுள் ஈட்டச் சொற்களில் ஒன்றாகத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது என்று கொள்ளலாம்.

செய்யுள் மொழியின் சிறப்புப் பண்பாக, வட மொழியில் வக்ரோத்தி

என்றும் ஆங்கிலத்தில் டிவியேஷன் (Deviation) என்றும் குறிப்பிடப் படுகிறது. வடமொழியில் வக்ரோத்தி ஜீவிதம் அதாவது உயிர் என்று குறிப்பிடப்படுவதும் அறியத் தகுந்தது. மொழியியல் திறனாய்வு நோக்கில் விகாரம் என்று கருதப்படுகிறது. அதனால் சேனாவரையர் கூறிய கட்டிய வழக்கு என்பதை விகாரம் என்று கொள்ளலாம் போல் தோன்றுகிறது.

திரிசொல் என்பது தொல்காப்பியம் இந்தச் சூத்திரத்தில் பொருண்மையியல் நோக்கில் விளக்கினாலும் மேலே விளக்கியுள்ள பிற சூத்திரங்களையும் இலக்கிய வழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் திரிசொல் என்பதைக் கூடுதலாக எழுத்து திரிதல், சொல் திரிதல், தொடர் திரிதல், கருத்தாடலில் தொடர் அமைப்பு மாற்றம் என்பவைகளையும் ஆகு பெயராக அல்லது உருவகமாகப் பொருள் திரிதலையும் உள்ளடக்கியது என்று கொள்ளலாம். அதாவது மொழியில் இயல்பாகக் காணப்படும் ஒரு பொருள் பல சொல், பல பொருள் ஒரு சொல் ஆகியவை இல்லாமல் கவிதைக்காகத் திரித்துக் கொள்ளப்பட்ட ஒரு பொருள் பல சொல், பல பொருள் ஒரு சொல் ஆகியவைகளைத் திரிசொல் என்று தொல்காப்பியர் நோக்கில் கொள்ள வேண்டும். அதற்கு மேலாகத் திரிசொல் என்பதைப் பொதுப் பொருளாகக் கொண்டு மேலே கூறியவைகளையும் ஏற்றுக்கொள்வது ஆய்வு வளர்ச்சியைக் காட்டும். எனவே திரிசொல் என்பது கவிதை மொழியின் சிறப்பு என்று கொண்டு அதன் பொருளை விரிவுபடுத்தி இலக்கிய ஆய்வில் பயன்படுத்தலாம். அதற்குத் தொல்காப்பியரே 'கிளந்த அல்லவேறு பிறத் தோன்றினும்/ கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே' (வேற்றுமை மயங்கியல் 35) என்று கூறியுள்ளது வழிகாட்டியாக அமையும்.

## அடிக்குறிப்பு

1. கட்டுரையைப் படித்துக் கருத்துரைத்த பேரா.கி.நாச்சிமுத்து அவர்களுக்கு நன்றி.

## துணையன்கள்


1. சண்முகம், செ.வை., சொல்லிலக்கணக் கோட்பாடு, தொ:1, அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர், 1984.
2. சண்முகம், செ.வை., தொல்காப்பிய ஆய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014
3. சிவலிங்கனார்,ஆ.(ப-ர்)தொல்காப்பிய உரைவளம், சொல்லதிகாரம், எச்சவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.

# உளவியல் பார்வையில் குறுந்தொகைப் பாடல்கள்

பேரா **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

**சென்ற இதழின் தொடர்ச்சி**

தலைவி ஒருத்தியின் கூற்றாகவரும் பதுமனாரின் பாடல் பிரிவுத்துயர் ஒரு பெண்ணை எவ்வாறெல்லாம் வாட்டும் என்பதை உளவியல் நுட்பத்துடன் தெளிவாக்குகிறது.

*நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்து*
*இனிதுஅடங் கினரே மாக்கள் முனிவின்று*
*நனந்தலை உலகமும் துஞ்சும்*
*ஓஓர் யான்மன்ற துஞ்சா தேனே* (*குறுந்தொகை. 6*)

மணம் செய்து கொள்ளுதற்கு முன் பொருள் ஈட்டுதற்குத் தலைவன் பிரிந்துசென்ற பொழுது பிரிவாற்றாத தலைவி தன் துன்பத்தை இவ்வாறு வெளியிடுகின்றாள்.

> நள்ளிரவு இருள் செறிந்துள்ளது; மாந்தரெல்லாம் பேச்சை நீக்கி இனிமையாகத் துயில்கின்றனர்; அகன்ற இடத்தை உடைய உலகத்தில் வாழும் எல்லா உயிர்களும் வெறுப்பு ஏதுமின்றித் துயிலும்; நான் ஒருத்தி மட்டுமே உறுதியாகத் தூக்கமின்றிக் கண் விழித்துள்ளேன்.

இருள்செறிந்த நள்ளிரவு, முன்னிரவைப்போலோ, விடியலைப்போலோ அல்லாமல் யாவரையும் தூக்கத்தில் ஆழ்த்தக்கூடியது. அப்பொழுதிலும் என்னால் தூங்கமுடியவில்லை. எனது தாய் போன்றவர்களெல்லாம் ஐயறிவுடைய மாக்களைப் போன்று உணர்வற்றுத் தூங்குகின்றனர். எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பதில் இன்பம் காண்பவர்கள் இப்பொழுது பேச்சை முற்றுமாக நீக்கி மகிழ்வோடு எக்கவலையுமின்றித் துயில் கொள்கின்றனர்; என்னோடிருந்து எனக்கு ஆறுதல் சொல்லவேண்டிய எனது தோழியும் பேய்த்தூக்கம் தூங்குகின்றாள்; மனிதர் மட்டும் அல்லர், எல்லா உயிர்களும் தூங்குகின்றன; உலகத்தில் வாழும் உயிர்கள் அப்படியொன்றும் குறைந்த எண்ணிக்கை உடையவை

அல்ல; உலகம் அப்படியொன்றும் சிறியதும் அன்று. இவ்வளவு பெரிய உலகில் வாழும் மக்களும் பிற உயிர்கள் யாவும் இவ்வாறு தூங்கும்போது எனக்குமட்டும் ஏன் தூக்கம் வரவில்லை. என்னைத் தூக்கம் ஆட்கொள்ளாதிருப்பது ஐயத்திற்கு உரியதுமன்று. நான் தூங்கவில்லையென்பதை, சற்றும் கண்ணயரவில்லையென்பதை உறுதியாக உணர்கிறேன்; இந்த அவலநிலை ஏன்?

இல்லத்தில் உடனிருக்கும் தாயையும் பிறரையும்கூட 'மாக்கள்' என்று சினந்து கூற அவள் தயங்கவில்லை. தனது உயிர்த்தோழியையும் வெறுத்துப்பேசுகிறாள். பிரிவுத்துயர் அவளைப்படுத்தும்பாடு அத்தகையது! தன்னைப்போல் தூக்கமின்றித்தவிக்கும் பலர் உலகில் இருப்பார்கள் என்று எண்ணிப்பார்க்கவும் அவளால் முடியவில்லை. காதலனிடமிருந்து பிரிந்திருத்தல் மட்டுமல்லாமல் உலக வாழ்க்கையில் பல நிகழ்வுகள் தூக்கத்தைக் கெடுக்கும் என்பதையும் அவள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. இவ்வாறு பிரிவுத்துன்பத்தால் அல்லலுறும் தலைவியின் கூற்றாக வரும் குறள் ஒன்றும் உண்டு.

***மன்னுயிர் எல்லாம் துயிற்றி யளித்திரா***

***என்னல்ல தில்லை துணை*** *(திருக்குறள். 1168)*

இரவில் வந்து தலைவியைச் சேர வேண்டுமென்று விருப்பம் தெரிவித்து இரங்கி நிற்கும் தலைவனிடம் தோழி குறிப்பால் மறுப்பை அறிவிப்பதாகக் கபிலர் பாடல் ஒன்று குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

***காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்***

***கருவி மாமழை வீழ்ந்தென அருவி***

***விடரகத்து இயம்பு நாடஎம்***

***தொடர்பும் தேயுமோ நின்வயி னானே*** *(குறுந்தொகை. 42)*

நள்ளிரவில் இடியும் மின்னலும் கூடிய பெருமழை பெய்தலால் நீர் மிகுந்து அதனால் அருவியானது பின் நாட்களிலும் மலையிடத்துள்ள வெடிப்புகளிலும் குகைகளிலும் ஒலிசெய்யும் குறிஞ்சி நிலத்திற்குரியவனே, மெய்யுறு புணர்ச்சி நீங்குவதாக இருப்பினும் உன்னிடத்தில் எமக்குள்ள நட்பு அழியுமோ?

'நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தலாக' வருவதென்பது உடன்பட்டாள் போன்ற சொல்லமைதியும் மறுத்தமையைக் குறிப்பால் புலப்படுத்தும் பொருளமைதியும் பொருந்தக்கூறுதல் என்று உரையாசிரியர்கள் விளக்குவர். இவ்வுத்தியே அரிய உளவியல் அடிப்படை கொண்டதாகும்.

'எம்தொடர்பு' என்று சொல்லும்போது தோழி தன்னைத் தலைவியோடு முற்றுமாக இணைத்துக் கொள்கிறாள். தலைவி தலைவனிடமோ, தாயிடமோ, செவிலியிடமோ சொல்ல விரும்பியதைச் சொல்லுதல் பண்பாடற்ற செயலாகக் கருதப்பெறும் சூழல்களிலெல்லாம் தோழி கூற்றாக அதனைத் தருதல்தானே அக இலக்கியமரபு.

இரவுக்குறி வேண்டி நிற்கும் தலைவனுக்குத் தோழி மறுப்பினைக் குறிப்பால் உணர்த்துகிறாள். "இரவுக்கூட்டம் இப்பொழுது இல்லாமற்போனாலும் தலைவிக்கும் உனக்கும் உள்ள காதலில் தொய்வு ஏற்படாது" என்று உறுதி கூறுகிறாள். அவனது நாட்டிலுள்ள அருவியைச் சிறப்பிக்கும்போதும் அக்கருத்தைக் குறிப்பால் வலியுறுத்துகிறாள். முதல்நாள் இரவில் மழைபெய்து நின்று போனாலும் அதனால் நீர்பெற்ற அருவி பின் நாட்களிலும் அறாது ஒழுகுதல்போல் முன்னர் நிகழ்ந்த கூட்டத்தால் பெற்ற உறவு பின்னர் அக்கூட்டம் நிகழவில்லையாயினும் அற்றுப்போகாது என்பது குறிப்பு.

இரவுக்குறி மறுப்பதால் அவன் காதலுக்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டதென்று அச்சமோ, ஐயமோ கொள்ளக்கூடாதென்பதால் 'நட்பு தேயாது' என்று உறுதி கூறுகிறாள். Her 'no' means 'yes' என்னும் ஆங்கிலப் பழமொழியை நினைவு கூர்கிறோம்.

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்கு வாயிலாக வந்த தோழியிடம் வாயில் மறுத்துக்கூறும் தலைவியின் கூற்றாக அள்ளூர் நன்முல்லையார் எழுதியுள்ள பாடல் அவர் பெண்ணுள்ளத்தின் ஆழம் கண்டவர் என்பதைப் புலப்படுத்தும்.

***நன்னலம் தொலைய நலமிகச் சாஅய்***
***இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்கு***
***அன்னையும் அத்தனும் அல்லரோ***
***புலவியஃது எவனோ அன்பிலங் கடையே.*** *(குறுந்தொகை. 93)*

எனது அருமைத்தோழியே! பெண்மை நலம் கெடவும், உடல் அழகு குறையவும், இன்னுயிர் நீங்கினாலும் அவரிடம் இரக்கம் கொள்ளத்தக்க சொற்களைச் சொல்லாதே. அவர் நமக்குத் தாயும் தந்தையும் ஆவாரன்றோ? கணவன் மனைவியர் பாலுள்ள அன்பு இல்லாதவிடத்து ஊடலால் என்ன பயன்?

பரத்தையிடம் சென்றுவந்த தலைவனை மனைவி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தோழி சொல்கிறாள். மனைவி அவனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. அதனைப் பண்பட்ட முறையில்

குறிப்பால் உணர்த்துகிறாள். "எனது பெண்மை நலம் அழியுமானாலும், அழகு குன்றுமானாலும், உயிரே போகுமானாலும் அவரை ஏற்றுக்கொள்ளுதல் எனது கடமை. அவர் நான் மணம் செய்து கொண்ட கணவர். ஆனால் கணவனுக்கு மனைவியிடம் இருக்கவேண்டிய அன்பு அவரிடம் இல்லை. அவரிடம் நான் கொண்டுள்ள தொடர்பு பிரிதற்கு அரியதென்பதால் அவர் என்னால் தாயைப்போல் போற்றுதற்கு உரியவர். கணவன் என்ற உறவு காரணமாக அவரது ஆணைக்கு அடங்கி நடத்தல் எனது கடமை. ஆயினும் அன்பில்லாத கணவனிடத்து மனைவி கொள்ளும் புலவியாலும் அது தீர்தலாலும் என்ன பயன் விளையும்? எனவே, அவர்பால் பரிவுகூர்ந்த சொற்களை நீ சொல்வதால் என்புலவி தீரப்போவதில்லை."

பரத்தையிடம் சென்ற கணவனின் செயலால் பெண்ணொருத்தி படும் வேதனையை இதனினும் அழுத்தமாகச் சொல்லுதல் எளிதன்று.

அள்ளூர் நன்முல்லையார் ஆண் உள்ளத்தின் ஆழமும் அறிந்தவர் என்பதை இன்னொரு பாடலால் அறியலாம்.

*காலையும் பகலும் கையறு மாலையும்*
*ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்*
*பொழுதிடை தெரியின் பொய்யே காமம்*
*மாவென மடலொடு மறுகில் தோன்றித்*
*தெற்றெனத் தூற்றலும் பழியே*
*வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.* *(குறுந்தொகை. 32)*

தன் குறையை ஏற்றுக்கொள்ளாத தோழியிடம் இரந்து நின்ற தலைவனின் கூற்றாகும் இது.

"காலைப்பொழுது, உச்சிப்பொழுது, பிரிந்தோரைத் துன்புறுத்தும் மாலைப்பொழுது, ஊரில் உள்ளோரெல்லாம் துயிலும் நள்ளிரவு, விடியற்காலம் ஆகிய சிறுபொழுதுகளெல்லாம் தோற்றுமாயின், அவற்றை உணரக் கூடியவர்களுடைய காமம் உண்மையன்று, பொய்யாகும்; அன்னார் காமவுணர்வுக்கு ஆட்பட்டவர் அல்லர். தலைவி என்னை ஏற்றுக்கொள்ளவில்லை யானால் பனைமடலால் செய்த குதிரையின் உருவத்தில் ஊர்ந்து, தெருவில் வெளிப்பட்டு, யாவரும் இப்பெண்ணால் இவன் இச்செயல் மேற்கொண்டானென்று அறிந்து கொள்ளுமாறு, தலைவி செய்த துயரைப்புலப்படுத்துதல் பெரும்பழிக்குக்

காரணமாகும். அவ்வாறு மடலேறாமல் உயிரோடு வாழ்ந்திருத்தலும் என்னால் ஆகாது." தலைவன், தோழியின் உள்ளத்தைக் கரைக்கக் கையாளும் உத்தி அவனது உறுதியான வெற்றிக்கு அடிகோலுவது. தான் உண்மையான காதல் வயப்பட்டவன் என்பதை 'நாளின் சிறுபொழுதுகளையெல்லாம் உணரமுடியாத நிலையில் தத்தளிக்கிறேன்' என்று கூறுவதால் தோழிக்கு உணர்த்துகிறான். "தெற்றெனத் தூற்றல் பழியே" என்று ஒப்புக்கொள்வதால், தான் ஏன் மடலேறவில்லை என்பதை விளக்குகிறான். தெற்றெனத் தூற்றல் என்பது "தலைவி என்னை ஏற்காமல் துன்புறுத்தினாள். அவள் என் குறை அறிந்து நிறை வேற்றாமையால் நான் மடலேறுகின்றேன். நீங்கள் தலைவியை எனக்கு மணம்புரிவித்து எனது துன்பத்தைப்போக்கி என்னைக் காத்தருளுதல் வேண்டும்" என்று ஊரில் உள்ள சான்றோரை அழைத்துக் கூறுதலாகும். 'மடலேறாததால் உயிர் துறத்தலே எனக்குள்ள ஒரே வழியாகும்' என்று மிரட்டுதல் மூலம் தோழியின் இரக்கத்தைப் பெறமுயல்கிறான். களவொழுக்கத்தின் இலக்கணங் களுள் இறுதியானது சாக்காடு ஆகும். எனவே அதனைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகிறான் தலைவன்.

தோழி அவனுக்கு இரங்கும் நிலைக்கும், தலைவி அவனை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள். தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் துயிலும்போது தலைவியைக் கனவில் கண்டு சொல்லியதாக ஒரு கவிதையைத் தருகிறார் கோப்பெருஞ்சோழன்.

***வேனில் பாதிரிக் கூன்மலர் அன்ன***
***மயிர்ஏர்பு ஒழுகிய அம்கலும் மாமை***
***நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல***
***இன்துயில் எடுப்புதி கனவே***
***எள்ளார் அம்ம துணைப்பிரிந் தோரே.*** *(குறுந்தொகை. 147)*

கனவே! வேனில் காலத்தில் மலரும் பாதிரிப்பூவின் துய்யைப்போன்ற மயிர் எழுந்து படர்ந்த அழகு ஒழுகும் மாமையையும் கலைநுட்பம் மிக்க அணிகலனையும் உடைய தலைவியைக் கொண்டு வந்து தந்ததைப் போன்று இனிய உறக்கத்தினின்றும் என்னை எழுப்புகின்றாய். தலைவியைப் பிரிந்த தலைவனோ, தலைவனைப் பிரிந்த தலைவியோ உன்னை இகழமாட்டார்.

தான் தன் காதலியைப்பிரிந்து வெகுதொலைவில் தூங்கிக் கொண்டிருந்தபோதும் இயற்கை அழகும் அணிகலன்களால் பெற்ற அழகும் மிக்கவளைக் கொணர்ந்து காட்டிய கனவிற்கு என்ன கைம்மாறு செய்வேன் என்று தலைவன் புலம்புகின்றான். தலைவன் தலைவியின்பால் கொண்ட காதலின் ஆழத்தையும் பிரிவாற்றாமையால் அவன் பெற்ற வேதனையையும் இதற்குமேல் முருகியல் இன்பம்தரச் சொல்லுதல் இயலுமா? கனவானது உண்மையில் காதலியைத் தராததால் 'தந்தோய் போல' என்று கூறுவான்; பிரிவாற்றாமையால் பெரும்பாலும் துயில முடியாமல் தவித்தவன் பெற்ற அரிய துயில் என்பதால் 'இன்துயில்' என்பான்; தலைவியைக் கண்டு, திடுக்கிட்டு விழித்தவனாதலின் அவ்வாறு விழித்தற்குக் கனவே காரணமென்பான்; துயில் நீங்குதற்குக் காரணமாகி இகழ்தற்கு உரியதாயினும் தலைவியின் தோற்றத்தைத் தந்ததால் 'எள்ளார்' என்பான்; காதலன் காதலி ஆகிய இருவருமே கனவின் இத்தகைய செயலால் மகிழ்வர் என்பதால் 'துணைப்பிரிந்தோர்' என்பான்! ஐந்து வரிக்கவிதையில் மூன்று வரிகளில் அவளது அழகிய தோற்றத்தை வியந்து பாராட்டிப் பெருங்களிப்பு அடைவான்.

தலைவனைச் சேர இயலாது தவிக்கும் தலைவி அவன் தன்னை விரைவில் மணந்து கொள்ளவேண்டுமென்ற விருப்பத்தை மறைமுகமாக அவனுக்குத் தெரிவிப்பதைக் கவிதையாக்குவார் உளவியல் அறிந்த வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார்,

***பயப்பு என் மேனியதுவே நயப்புஅவர்***
***நார் இல் நெஞ்சத்து ஆர் இடையதுவே***
***செறிவும் சேண் இகந்தன்றே அறிவே***
***ஆங்கண் செல்கம் எழுகென ஈங்கே***
***வல்லா கூறி யிருக்கும் முள்இலைத்***
***தடவுநிலைத் தாழைச் சேர்ப்பர்க்கு***
***இடம்மன் தோழி எந்நீரோ வெனினே.*** *(குறுந்தொகை. 219)*

என் அன்புக்குரிய தோழியே, பிரிவாற்றாமையால் பசலையானது எனது உடலை ஆட்கொண்டது. நான் அவர்பால் கொண்ட காதலானது அவரது அன்பற்ற நெஞ்சமாகிய செல்லுதற்கு அரிய இடத்திற்குச் சென்றுவிட்டது. எனது அறிவு "தலைவர் உள்ள இடத்திற்கே செல்வோம், எழுவாயாக" என்று நம்மால் செய்ய இயலாததைக்கூறி இங்கேயே தங்கி இருக்கும். எவ்வாறு இருக்கின்றீரோ என்று இரக்கத்தோடு கேட்டு எனது குறைதீர்க்க

முன்வருவாரானால் முள் அமைந்த இலையும் பருத்த அடியும் கொண்ட தாழையை உடைய கடற்கரைத் தலைவர்க்கு இதுவே தக்க செவ்வியாகும்.

பகற்குறிக்கண் நிகழும் இடையூறுகளால் வருந்தும் தலைவி அவன் விரைவில் தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பத்தையும் அதுவே நல்லதீர்வு என்ற தனது முடிவையும் அறிவிக்கும் முறை சிறப்பானது. இதற்கு அவள் உடலும், உள்ளமும், அறிவும் உடன்பட்டுள்ளன என்பதைப் பசலை, காதல், அடக்கம், அறிவு ஆகிய நான்கின் செயல்பாடுகளையும் சுட்டுவதால் உணர்த்துவாள்.

செறிவும் அறிவும் பெண்பாலர்க்கு உரிய சிறப்பியல்புகள் என்பதைத் தொல்காப்பிய நூற்பா கூறும்.

*செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்*

*அறிவும் அருமையும் பெண்பாலான.* (*தொல்.பொருள்.15*)

தலைவன் உள்ள இடத்திற்கே செல்வோம் என்று தலைவி கூறுவது உளவியல் அடிப்படை கொண்ட மரபாகும்.

***காமக் கிழவன் உள்வழிப் படினும்***

***தாவினன்மொழி கிழவி கிளப்பினும்*** **(தொல் களவு. 22)**

என்பது களவியல் நூற்பா.

தலைவியின் அடிமனம் திருமணத்தை விழைகிறது. அதனை வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்படும் தலைவி உடல் பசப்பாலும் காதலுணர்வு தலைவன்பால் தஞ்சம் அடைந்துவிட்டதாலும் நன்மையையும் தீமையையும் ஆய்ந்து கூறும் அறிவு தலைவனின் இருப்பிடத்திற்கே செல்லவேண்டுமென்று கூறுவதாலும் அவர் "எவ்வாறு இருக்கின்றாய்?" என்று கேட்டு வருவாரானால் உடனே ஏற்றுக்கொள்ள ஏற்பாடுசெய் என்று தோழியை வற்புறுத்துகின்றாள். அறிவும் உடலும் உள்ளமும் ஒன்றுபட்டு அவளைத் தங்கள் கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டன போலும் அவளால் அவற்றிற்கு எதிராக ஒன்றும் செய்ய இயலாததுபோலும் அவள்பேசுவது நோக்குதற்குரியது.

வெளியூர் சென்று மீண்டுவரும் தலைவன் பாகனுக்குத் தலைவியின் ஊரைக்காட்டுவதாக, பேயன் என்னும் புலவர் பெருமான் பாடியுள்ள பாடல் அவரது கூர்த்த மதியையும் நுண்ணுணர்வையும் புலப்படுத்தும்.

***கவலை கெண்டிய கல்வாய்ச் சிறுகுழி***

***கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்***

*பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன*
*கார்எதிர் புறவி னதுவே உயர்ந்தோர்க்கு*
*நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்*
*வரைகோள் அறியாச் சொன்றி*
*நிரைகோல் குறுந்தொடி தந்தை ஊரே* (குறுந்தொகை. 233)

வரிசைப்பட்ட திரட்சியை உடைய குறிய வளைகளை அணிந்த தலைவியின் தந்தைக்கு உரிய ஊரானது, உயர்ந்தோர்க்கு நீரொடு சொரிந்து அளித்து எஞ்சிய பொருளையும் யாவர்க்கும் தட்டில்லாது தரக்கூடிய பெருஞ்சோற்றையும் உடையது. கவலைக் கிழங்கைத் தோண்டி எடுத்ததனால் உண்டான அகன்ற வாயை உடைய சிறிய குழி கொன்றையின் ஒள்ளிய மலர் பரவப்பெற்று, செல்வந்தர்களின் பொன்வைக்கும் பெட்டியின் மூடியைத் திறந்து வைத்தாற்போன்ற தோற்றத்தை உடைய கார்காலத்தை ஏற்றுக்கொண்ட முல்லை நிலத்தில் உள்ளது அவ்வூர்.

காதல் வயப்பட்ட கன்னியை மணந்து கொள்ளாமல் ஏதோவொரு வினைமேல் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வரும்போது பாகனுக்குத் தலைவி வாழும் ஊரைச் சுட்டிக்காட்டுவதாகப் பாடலின் சூழல் அமைகிறது. அவளை மணந்து கொள்ளப் பொருள் தேடிப்பிரிந்திருக்கலாம்; அல்லது வேந்தனின் வேலையாக வெளிநாடு சென்றிருக்கலாம்; அல்லது நாட்டைக்காக்கப் போர்க்களம் போயிருக்கலாம். பிரிந்திருந்தவன் மீண்டும் வரும்போது தலைவியின் ஊர்நெருங்கும்போது அவனது வேட்கையும் மகிழ்ச்சியும் மிகுவது இயல்பே. பெருமிதவுணர்வோடு அவ்வூரைப் பாகனுக்கு அறிமுகம் செய்கிறான். அது முல்லைநிலத்தில் உள்ளது; பெருவளம் பெற்றது; ஈடிணையற்ற அழகுடையது; செல்வம் கொழிப்பது. கவலைக்கிழங்கைக் கல்லியதால் உண்டான குழியில் கொன்றை மலர்கள் பரவப்பெறுவதால் பொன்பேழையைத்திறந்து வைத்தாற் போன்ற காட்சியை அங்குக் காணலாம்! இங்கு பொன் என்று கூறப்பெற்றது உருண்டை வடிவினதான பொற்காசுகளைக் குறிக்கும் என்பர். உயர்ந்தோர்க்கு அள்ளி வழங்கி எஞ்சிய பொருளைப் பலர்க்கும் வரையாது கொடுக்கும் செல்வம் உடையவன் தலைவியின் தந்தை. இவ்வாறெல்லாம் தலைவியின் தந்தையையும் அவரது ஊரையும் வாயாரப்புகழும் தலைவன் தலைவியைப்பற்றி, 'நிரைகோல் குறுந்தொடி' என்ற சிறுதொடர் மட்டுமே

பயன்படுத்துகிறான். அவளது அழகையோ பண்புநலன்களையோ விரித்துரைக்கவில்லை. அவள்பால் தான்கொண்டுள்ள காதலையோ, அவள் அவன்பால் வைத்துள்ள அன்பையோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ விளக்கவில்லை. ஆனால் அவைபற்றியெல்லாம் அவன் எண்ணியெண்ணிப் பேருவகை கொண்டிருக்கவேண்டும். அதன்வெளிப்பாடாகவே பாகனிடம் அவள் ஊரைக்காட்டி அவள் தந்தையைப் பற்றிப்பேசுகிறான். அவளது பெருமையையும் அவர்கள் ஒருவர்பால் ஒருவர் கொண்டுள்ள காதலையும் விதந்து கூறத்தேவையில்லையென்றும் பாகன் அவற்றை அறிந்திருப்பான் அல்லது உணர்ந்து கொள்வான் என்றும் தலைவன் கருதியிருக்க வேண்டும்.

பிரிந்திருந்து மீண்டும் தலைவியோடு சேரப்போகும் தலைவனின் உள்ளவுணர்வுகளை இதனினும் நுட்பமாக எவ்வாறு படம்பிடித்துக்காட்ட இயலும்?

இல்லச்சிறையில் அடைக்கப்பட்டுக் கடிய காவலில் வைக்கப்பட்டிருக்கும் தலைவி "என் நோய் நீக்கத் துணைசெய்வார் யாரும் இல்லையே" என்று உள்ளம் நொந்து கூறுவதைப் படம்பிடித்துக் காட்டும் பாடல் ஒன்றைக் குப்பைக்கோழியார் என்று அழைக்கப்பெறும் புலவர் பாடியுள்ளார்.

***கண்தர வந்த காம ஒள்ளெரி***
***என்புஉற நலியினும் அவரொடு பேணிச்***
***சென்று நாம் முயங்கற்கு அருங்காட் சியமே***
***வந்துஅஞர் களைதலை அவர்ஆற் றலரே***
***உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை களையார்***
***குப்பைக் கோழித் தனிப்போர் போல***
***விளிவாங்கு விளியின் அல்லது***
***களைவோர் இலையான் உற்ற நோயே. (குறுந்தொகை. 305)***

காதலரைப் பார்த்த கண்கள் தந்ததனால் விளைந்த காமமாகிய ஒள்ளிய தீ எலும்பைப் பொருந்தும்படி அளவற்ற துன்பத்தைச் செய்தாலும், அவரிடம் விரும்பிச்சென்று அளவளாவி மகிழ்தற்கு வழியில்லாமல் போய்விட்டது. முன்பு நம்மை அவர் கண்ட இடத்தில் இப்பொழுது அவரைப் பார்க்க முடியவில்லை. நாமிருக்கும் இடத்திற்கு

வந்து நமது வருத்தத்தை நீக்குதலையும் அவர் செய்யாதவராயினார். இந்த நிலையில் நான் அடைந்த இக்காமநோயைக் களைவார் யாரும் இல்லை. குப்பைக்கோழிகளைப் போர் செய்யுமாறு தூண்டுவார் இலர்; அவை ஒன்றையொன்று தாக்கிப் போர் செய்யும்போது அவற்றை விலக்கிவிடுவாரும் இலர். எனவே அவை தனிமையில் போர்செய்து அல்லலுறும். எனது நிலையும் இப்பொழுது அவ்வாறே உள்ளது. என் காமநோயைக் கண்டு கொள்வார் யாரும் இல்லை.

தலைவனைக் கண்ட அளவிலேயே அவன்பால் தன் நெஞ்சத்தைப் பறிகொடுத்ததை எண்ணிப்பார்ப்பாள். களவுமணம் கண்தர வந்த காமத்திலேயே தொடங்கும். " Whoever loved that loved not at first sight?" (முதல் பார்வையிலேயே காதல் கொள்ளாதோர் யாரே காதலராவர்?) என்பர் ஆங்கிலக்கவிஞர்கள். காமத்தால் ஏற்படும் துன்பம் புறத்தே தோன்றாமல் அகத்தே அல்லல் விளைக்குமாதலின் 'என்புற நலிதல்' என்பாள்.

காமத்தின் கொடுமையை விளக்க அதனைப் பற்றியெரியும் தீயோடு ஒப்பிடுவார் கவிஞர்.

***"காமநோய்போல் விடில்சுடலாற்றுமோ தீ"*** *(குறள். 1159)*

***"நீருள்குளிப்பினும் காமம்சுடுமே குன்றேறி ஒளிப்பினும் காமம் சுடும்"*** *(நாலடியார். 90)*

***"மொழிந்த காமக்கொடுங்கனல் மூண்டதால்"***

***(கம்ப,சூர்ப்பணகைப்படலம். 72)***

"இவ்வுலகைக் காமம் எனும் தீ எரித்துக்கொண்டேயிருக்கிறது" என்பார் டி.எஸ்.எலியட் தமது "பாழ்நிலம்" எனும் ஆங்கிலக்கவிதையில்.

தனது துயர்களையும் துணையற்ற நிலையில் விளக்குதற்குத் தலைவி குப்பைக்கோழி உவமையைப் பொருத்தமாகக் கையாள்வாள். குப்பைக்கோழிகள் ஒன்றையொன்று தாக்கிச் சண்டையிடும் போது அதனைக் கண்டு கொள்வாரோ, தடுத்து நிறுத்துவாரோ யாரும் இல்லாததால் அவற்றின் துன்பம் பெருகும். தலைவியின் காமநோயும் கேட்பாரற்று அவளை வாட்டுகின்றது. துணைசெய்யவேண்டிய தோழியும் ஏதும் செய்யாது உள்ளாளே என்பதையும் தலைவி குறிப்பால் உணர்த்துகிறாள். அவள் அறத்தொடு நிற்றலைத் தொடங்கவேண்டியது இன்றியமையாதது என்பது நுட்பமாகப் புலப்படுத்தப்பெறுகிறது.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# சீவக சிந்தாமணியில் கற்பனை நயமும் வருணனைத் திறனும்

முனைவர் உ.கருப்பத்தேவன்,
உதவிப்பேராசிரியர் & தலைவர் (பொ)
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரைகாமராசர் பல்கலைக்கழகம்.
கைபேசி: 9443571776.

சென்ற இதழின் தொடர்ச்சி

*"சிந்துரப் பொடிகளும் செம்பொற் சுண்ணமும்*
*சந்தன நீரொடு கலந்து தையலார்*
*பந்தொடு சிவிறியில் சிதறப் பார்மிசை*
*இந்திர வில்எனக் கிடந்த வீதியே"* *(சீவக.நாமகள், பா.எண்.86)*

இடைநகரில் இளம்பெண்கள் நறுமணம் மிக்க செந்நிறமான பொடிகளையும், பொன்நிறமான பொடிகளையும், சந்தனத்தையும் பனிநீருடன் கலந்து நீர்வீசு கருவிகளில் ஊற்றிச் சிதறினர். சிதறப்பட்ட பொடிகள் வீதிகள் எங்கும் படிந்து பல வண்ணத் தோற்றத்துடன் பொலிவு பெற்று இந்திரவில் தரையிலே கிடப்பது போல இருந்தது என்று வரும் இவ்விடம் திருத்தக்கதேவரின் காட்சி விளக்கக் கற்பனைக்குச் சான்றாகும்.

## இயற்கைக் கற்பனை

சீவகன், கேமசரியைப் பிரிந்து காட்டுவழியே சென்று கொண்டிருக்கின்ற போது அவன் காணுகின்ற காட்சியை இயற்கைக் கற்பனைக்குச் சான்றாகக் குறிப்பிடலாம். சீவகன் தான் செல்லுகின்ற வழியில் தோகையையுடைய மயிலின் கழுத்தைப்போல் காயாம்பூ மலர்ந்துள்ளன. கோங்க மரங்கள் அனைத்தும் பெருநில மன்னனின் முடிசூட்டு விழாவில் அவன் முன் பணியும் சிற்றரசர்கள் போலப் பூத்துக்கிடக்கின்றன. அம்முடியுடைய மன்னர்களின் பின் செல்லும் வண்ண ஆடையணிந்த மெய்க் காவலர்களைப் போலக் கடம்ப மரங்கள் மலர்ந்திருக்கின்றன. இக்கருத்தினை விளக்கும் செய்யுள் வருமாறு:

*"கலவ மாமயில் எருத்தின் கடிமலர் அவிழ்ந்தன காயா*
*உலக மன்னவன் திருநாள் ஒளிமுடி அணிந்து நின்றவர்போற்*
*பலவும் பூத்தன கோங்கம் பைந்துகில் முடியணிந் தவர்பின்*
*உலபு காஞ்சுகி யவர்போல பூத்தன மரமங் கொருங்கே"*

*(சீவக.கனகமாலை, பா.எண்.1558)*

இயற்கையில் மலர்ந்திருக்கின்ற மலர்களைத் திருத்தக்கதேவர் மயிலோடும் மன்னர்களோடும் ஒப்பிட்டுப் பேசுகின்றார். மலைகளில் மேகங்கள் தவழ்வதும், விலகுவதும் மலைகளிலிருந்து அருவிகள் வீழ்வதும் இயற்கையானதொன்றாகும். ஆனால் இக்காட்சியைத் திருத்தக்கதேவர் தம் கற்பனையை ஏற்றுக் கூறுமிடத்தில்,

*"வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு*
*ஊழ்ந்து தோலுரிப் பனபோ லொத்த மற்றவற் றருவி*
*தாழ்ந்து வீழ்ந்தவை முழவிற் றதும்பின் மதுகரம் பாடச்*
*சூழ்ந்து மாமயி லாடி நாடகந் துளக்குறுத் தனவே"*

***(சீவக.கனகமாலை,பா.எண். 1560)***

எனக் குறிப்பிடுகின்றார்.

வெண்ணிற மேகங்கள் தவழும் பெரிய மலைகள் பாம்புகள் தோல் உரிப்பவை போலவும், அம்மேகங்கள் நகர்ந்த பின் தோல் உரித்துக்கிடக்கும் பாம்புகள் போலவும் தோற்றமளித்தன. அம்மலையில் விழும் அருவிகள் முழவொலியை ஒத்து ஒலிக்கின்றன. அவ்வொலியைக் கேட்ட வண்டுகள் பாடுகின்றன. மயில்கள் நடனமாடுகின்றன என்று வருணிக்கும்போது அவருடைய இயற்கைக் கற்பனைக் காட்சியின் நுட்பத்தைக் காணமுடிகின்றது.

**புராணக் கற்பனை**

திருத்தக்கதேவர் புராணச் செய்திகளைக் கற்பனையாக அமைத்துச் சில பாடல்களைப் பாடியிருக்கின்றார். ஆணைச் சக்கரத்தை யுடைய பரதேசுவரச் சக்கரவர்த்தியின் யானைக்கூட்டம் போலக் கடல் நீரை முகந்து செல்கின்ற மேகங்கள் மலை முகட்டில் தங்கிக் கருகிக் கொண்டு பின்னர் மழை மேகமாகிக் கொன்றை மாலையணிந்த சிவனின் வார்சடைபோல மின்னி மழை பொழிந்தது. இதனைத் திருத்தக்கதேவர்,

*"இலங்க லாழியி னான்களிற்று ஈட்டம் போல்*
*கலங்கு தெண்திரை மேய்ந்து கனமழை*
*பொலங்கொள் கொன்றையினான் சடை போல் மின்னி*
*விலங்கல் சேர்ந்துவிண் ஏறிவிட்டு ஆர்த்தவே"*

***(சீவக.நாமகள்,பா.எண். 32)***

என்னும் செய்யுளில் குறிப்பிடுகின்றார். சச்சந்தனும் விசயையும் சேர்ந்திருந்த காட்சி சிவனும் உமையும் போல ஒருடலாய்க் காட்சி தருவதைக் கண்ட திருத்தக்கதேவர்,

*"பொன்அம் கொடி அமிர் தனாளும் பொன்னெடுங் குன்றனானும்*
*அனங்கனுக் கிலக்கமாகி அம்புகொண்டு அழுத்த வில்லார்*
*இனந்தமக்கு எங்கும் இல்லார் இயைந்தனர் என்ப முக்கண்*
*சினந்திகழ் விடைய னானுஞ் செல்வியும் சேர்ந்த தொத்தே"*

*(சீவக.நாமகள்,பா.எண். 188)*

எனச் சுட்டுகின்றார். இப்பாடலைத் திருத்தக்கதேவரின் புராணக் கற்பனைக்குச் சான்றாகக் கூறலாம்.

**உருவகக் கற்பனை**

இராசமாபுர நகரைச் சுற்றியுள்ள மதிலைப் பற்றிக் கூறுமிடத்தில் திருத்தக்கதேவரின் உருவகக் கற்பனை இடம்பெறுகின்றது. வயிரமலை கண்விழித்தது போல மேகம் தவழும் வயிரமணிகள் பதித்து இழைத்த தாழ்ப்பாள் பொருந்திய கதவுகளை உடைய முன்வாயில் (கோபுரம்) முகமாகவும், வயிரம் பதித்த இடைக்கூடங்கள் கொங்கைகளாகவும், வானளாவப் பறக்கும் அழகிய கொடிகளே கூந்தலாகவும், வைரம் போல ஒளி வீசும் அகழி நீரே ஆடையாகவும் விளங்கும் மதிலானது அழகிய கன்னிப்பெண் போல் காட்சியளிக்கின்றது.

*"வயிரவயிர கண்விழிப்ப போன்றுமழை உகளும்*
*வயிரமணித் தாழ்க்கதவு வாயில் முகமாக*
*வயிரமணி ஞாயில்முலை வான்பொற் கொடிக் கூந்தல்*
*வயிரக் கிடங்காடை மதிற் கன்னியது கவினே"*

*(சீவக.நாமகள்,பா.எண்.105)*

முன்வாயில் முகத்திற்கும், இடைக்கூடங்கள் முலைகளுக்கும், கொடிகள் கூந்தலுக்கும், அகழிநீர் ஆடைக்கும் என மதிலை ஒட்டு மொத்தமாக ஒரு கன்னிப் பெண்ணாக உருவகப் படுத்தியிருப்பது அவரது உருவகக் கற்பனைக்குச் சிறந்த சான்றாகும்.

**இலக்கிய இன்பம் தரும் கற்பனை**

சீவகன் தண்ட காரணியத்தில் தன் தாய் விசயையைக் கண்டு வணங்கி அவள் வாழ்த்தினைப் பெற்றுப் பின்னர் இராசமாபுரம் வந்து சோலையில் தன் தோழரோடு தங்குகின்றான். மறுநாள் அவன் தன் தோழரை அவ்விடம் விட்டுவிட்டு இராசமாபுர வீதி வழியே செல்கின்றான். அங்கிருந்த மகளிர் சீவகனைக் கண்டு அவனழகில் மயங்கி மனத்தினைப் பறி கொடுக்கின்றனர். இக்காட்சியைக் கண்ட திருத்தக்கதேவர்,

*"விண்ண கத்திளை யானன்ன மெய்ப்பொறி*
*அண்ண லைக்கழி மீன்கவர் புள்ளென*
*வண்ண வார்குழல் ஏழையர் வாள்நெடுங்*
*கண்ணெ லாம்கவர்ந் துண்டிடு கின்றவே"*

*(சீவக.விமலை,பா.எண். 1949)*

எனப்பாடுகின்றார். உப்பங்கழியிலுள்ள மீன்களைப் பறவைகள் கவர்ந்துண்ணுவது போல் நீண்ட கூந்தலையுடைய மகளிரின் கண்கள் சீவகன் அழகினைக் கவர்ந்து உண்டன என்று குறிப்பிடுகின்றார். பறவைகள் மீன்களைக் கவர்ந்துண்ணல் என்பது இயல்பான நிகழ்ச்சி; சீவகனின் அழகினைப் பாவையர்கள் கண்டு களித்தனர் என்பதே ஆசிரியர் கூறவரும் கருத்தாகும். அவ்வாறே கூறினால் சுவை பயக்காது என்று கற்பனை வளமேற்றிப் படைத்துள்ளார். கண்ணுக்குத் தொழில் காண்பதேயன்றி உண்ணும் நிலை இல்லை. ஆனால் திருத்தக்கதேவர் பாடலில் சுவை கூட்டுவதற்காகக் கற்பனை கலந்து பறவை மீனை உண்ணுவது போல் சீவகனின் அழகினைப் பருவப்பெண்கள் உண்டனர் என்னும் பொருள்படும்படி பாடியிருக்கின்றார். பொழிலாட்டில் பல்வேறு விளையாட்டுக்களில் மகளிர் ஈடுபட்டுள்ளனர். அதில் ஒரு பெண் பந்தாடிக் கொண்டிருக்கின்றாள். அதனையே,

*"துணையில் தோகை மஞ்ஞை ஈயற்கு இவரும் வகைபோல்*
*மணியார் வளைசேர் முன்கை வலனும் இடனும் போக்கி*
*இணையில் தோழி மார்கள் இறுமால் இடையென்று இரங்க*
*அணியார் கோதை பூம்பந் தாடும் அவளைக் காண்மின்"*

*(சீவக.குணமாலை,பா.எண். 925)*

பெடை இல்லாத ஆண்மயில் சுற்றிப் பறக்கும் ஈசல்களை உணவாகப் பிடிப்பதற்குத் தாவித்தாவிப் பறப்பதைப் போல வளையணிந்த பெண் தன் தோழியர் இரங்கும்படி முன்கையை இடப்பக்கமாகவும் வலப்பக்கமாகவும் செலுத்தி இடை ஒடிந்து விடுமோ என்னும்படி ஆடிக்கொண்டிருக்கிறாள் என்பதே இப்பாடலின் திரண்ட கருத்தாகும். கூந்தல் காற்றில் பறக்க முன் கையை இருபக்கமும் வீசி அசைத்துக் குதித்துக் குதித்துப் பந்தாடினாள் என்று கூறினால் சுவை தராது என்பதற்காக அழகிய வண்ணத் தோகைகள் காற்றில் பறக்க இரு பக்கத்து இறகுகளையும் மேலும் கீழும் அசைத்துத் தாவித் தாவிப் பறக்கும் மயில்போலப் பந்தாடினாள் என்று கற்பனை வளமேற்றிப்

பாடியுள்ளதால் இப்பாடல் இலக்கிய இன்பச் சுவையைப் பெறுகின்றது. சீவக சிந்தாமணியில் இலக்கிய இன்பத்திற்காகவே இதுபோன்ற கற்பனைகளைத் திருத்தக்கதேவர் மிகுதியும் கையாண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

**வருணனைத் திறன்**

ஒன்றன் இயல்பினை அழகுறக் கவிநயம் மிக எடுத்துக்கூறும் போது அது வருணனையாகின்றது. உணர்ச்சிக்கு முதன்மையளித்து அமைக்கும் தனிப்பாடல்கள், குறுங்கவிதைகள் போன்றன வருணனைக்கு இடம் அளிக்கும் வாய்ப்பு இன்றி அமைகின்றன. ஆனால் நீண்ட கவிதைகளும் விரிந்த இலக்கியங்களும் விளக்கமாக அமையும் பாடல்களும் இவ்வருணனையை ஒரு இன்றியமையாத கூறாகக் கொள்கின்றன. காப்பியத்தில் இயற்கை, பாத்திரங்கள், நிகழ்வுகள், செயல்கள் போன்றவை மிகுதியும் வருணனைக் களங்களாகின்றன. “வருணனை என்பதோ, தசைகள் உயிர்ப்புடன் விளங்கக் குருதியோட்டத்தைக் கொண்டு செலுத்தும் நரம்புத் தொகுதி. போதிய அளவு குருதியோட்டம் இல்லாதவன் வலிமையோடு இருக்கமுடியாது. அது போன்றே வருணனை இல்லாத காப்பியமும் சிறப்படைய முடியாது” (செல்லப்பன், பெருங்கதை ஆராய்ச்சி, ப.123)

ஐம்புலன்களும் உணரும் இயற்கையும், இயல்புப்பொருள்கள் பிறவற்றையும், நிறங்களில் ஓவியப்படுத்தியும், வடிவங்களில் சிற்பமாக்கியும் தரும் பிற கலையியல்களைச் சொற்களால் வருணித்துத்தரும் நிலையில் காப்பியப் புலவனிடம் காண்பதே வருணனையாகும். “கட்புலனுக்குரிய வண்ணமும் வடிவமும், செவிப்புலனுக்குரிய குரலொலிகளும் நுகர்ச்சிக்குரிய மணமும் நாற்றங் களும், மெய்யால் உற்று உணர்த்தற்குரிய தன்மை வெம்மைகளும் முதலிய பல் புலன்களுக்கும் ஏற்கும் வண்ணம் அனைத்தையும் சொற்களாலேயே இயங்கும் சித்திரமாக்கித் தரும் நிலையில் இவ்வருணனை அமைகின்றது” (ச.வே.சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப.252) என்கின்றார் ச.வே.சுப்பிரமணியன். மேலும் இவற்றை வகைப்படுத்தும் போது “இடவருணனை, பொழுதுவருணனை, செயல் வருணனை, உருவ வருணனை, பண்பு வருணனை போன்று பல அமையலாம்” (ச.வே.சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப.252) என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

**சிந்தாமணியில் வருணனைகள்**

சீவக சிந்தாமணி நாட்டுவளம், நகர்வளம் போன்ற பகுதிகள் வருணனைகளுக்குத் தனியிடம் தருகின்றன. சிறு வருணனைகளும் சிறப்பாக அமைந்துள்ளன. உவமையழகும் உருவக இயல்பும் பொருந்திய பல வருணனைகள் இடம்பெற்றுள்ளன. காப்பியப் பின்னணியில் நிலமும் பொழுதும் கருப்பொருட்களும் வருணனையாகப் பொருந்துகின்றன. 'மலை கடல் நாடு வளநகர் பருவம் இருசுடர்த் தோற்றம்' ஆகிய இயற்கை வருணனைகள் இலக்கியக் கூறுகளாகக் காப்பியத்தில் பொருந்துமாற்றைத் தண்டியின் பெருங்காப்பிய இலக்கணம் உணர்த்துகின்றது. நாட்டுவளம், நகர்வளம் பாடும் மரபு புகுந்துவிட்ட பாங்கினதான சிந்தாமணியில் சீவகன் செல்லும் நாடுகளையும் கடக்கின்ற காடுகளையும், தங்குகின்ற பொழில்களையும் ஆறுகளையும், காட்டுமிடத்துப் பல பாடல்களில் நீண்ட, தொடர்ந்த வருணனைகளைக் காணமுடிகின்றது.

**இடவருணனை**

சீவகன் கேமசரியைப் பிரிந்து காட்டுவழியே செல்லும் போது குறிஞ்சி நிலம் வழியாகச் செல்கின்றான். அக்குறிஞ்சி நிலம், யானைகளின் தந்தமாகிய வெண்மையான உலக்கையாலே பாறையாகிய உரலில் ஐவன நெல்லை இடித்து அவலாக்கித் தேனாகிய நெல் கலந்த அவலையும், சுவைமிக்க வாழைப் பழங்களையும், உண்டால் உள்ளுருகும் சுவைமிக்க தினைமாவையும் ஓரிடத்தில் குவித்து, மான் போன்ற கண்களையுடைய பெண்கள் பசித்தவரை நோக்கிக் கொடுக்கும் தன்மையதாகும். இதனைத் திருத்தக்கதேவர்,

> ***"யானை வெண்மருப்பு உலக்கை அறையுரல் ஐவனம் இடித்த***
> ***தேனெய் வாசவல் குலவித் தீங்கனி வாழையின் பழனும்***
> ***ஊனை உண்டவர் உருகும் பசுந்தினைப் பிண்டியும் ஒருங்கே***
> ***மானின் நோக்கியர் நோக்கி வழிதொறும் ஈவது அவ்வழியே"***
>
> ***(சீவக.கனகமாலை,பா.எண். 1562)***

என்னும் செய்யுளில் வருணிக்கின்றார். இது இடவருணனைக்குத் தக்க சான்றாகும்.

**பொழுது வருணனை**

சிறுபொழுது, பெரும்பொழுது ஆகிய காலத்தைப் பகுத்துக் காணத் துணையாக இருப்பது சூரியனும் நிலவும் ஆகும். காப்பியக்

கதையின் பின்புலத்தில் இக்கூறுகள் அமைந்து கால உணர்வைப் புலப்படுத்துகின்றன. சீவகன் பதுமையைப் பிரிந்து போன காலைக் காட்சியைத் திருத்தக்கதேவர்,

***"பொய்கையுள் கமலத்து அங்கண் புள்ளெனும் முரசம் ஆர்ப்ப***
***வெய்யவன் கதிர்கள் என்னும் விளங்கொளித் தடக்கை நீட்டி***
***மையிருட் போர்வை நீக்கி மண்ணக மடந்தை கோலம்***
***பையவே பரந்து நோக்கிப் பனிவரை நெற்றி சேர்ந்தான்"***

***(சீவக.பதுமை,பா.எண். 1406)***

என்னும் செய்யுளில் வருணிக்கின்றார். பொய்கைகளில் தாமரை மலரிலிருந்து வண்டுகள் திருப்பள்ளியெழுச்சி முரசம் ஒலிக்க, சூரியன் செங்கதிர்கள் என்னும் தன் நெடிய கைகளை நீட்டிக் காரிருள் போர்வையைக் கிழித்துவிட்டு நிலமகளின் அழகைக்காண விழிகளைப் பரப்பி உச்சியில் வருகின்றான். சூரியன் தோன்றி மறைவதை மனித வாழ்க்கைத் தத்துவமாகத் திருத்தக்கதேவர் குறிப்பிடுகின்றார். இளங்குழந்தைபோலக் கீழ்த்திசையில் தோன்றிய கதிரவன் வாலிபனாய் வளர்ந்து வெப்பம் மிகும் உச்சிப் பொழுதாகி, பின் ஆசைகள் அற்றுப்போன கிழவனைப் போலத் தன் அழகிய ஒளி குன்றிய மாலைப் பொழுதாகி மறைகின்றான். இதனை,

***"குழவியாய்ப் பிறந்து வெய்யோன் குமரனாய் முறுகிப்பால்***
***விழைவு தீர் கிழவன் ஆகி விழுக்கதிர் உலந்து வீழ***
***மழலை வண்டு உழல நக்க மல்லிகை அலங்கல் சூட்டிக்***
***குழல்புரை கிளவி யொடும் கொழும்புகை அமளி சேர்ந்தான்"***

***(சீவக.கேமசரி,பா.எண். 1503)***

கதிரவனின் ஒருநாள் வாழ்வை மனிதனின் முழுவாழ்வோடு ஒப்பிட்டு அதற்கேற்ற சொல்லாட்சிகளை இச்செய்யுளில் பயன்படுத்தியிருக்கின்றார் திருத்தக்கதேவர்.

**கதை மாந்தர் வருணனை**

பாத்திர வருணனையும் காப்பியத்தில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. இயல்பான வருணனை அமைவதுடன் கேசாதி பாதமாகவும், பாதாதி கேசமாகவும் அமைக்கும் உத்திப் பாங்கும் காணப்படுகின்றது. திருத்தக்கதேவர் விசயையின் உருவை வருணிக்கின்ற பொழுது கேசாதிபாதமாக (164-178) வருணிக்கின்றார். விசயையை வருணிக்கும் காட்சியில் எண்ணெய், புனுகு முதலானவற்றில்

மூழ்கி இருளைப் பிடித்துத் திருகி, காண்பவர் கண் மயங்க நெறிகலங்க இருக்கும் விசயையின் இருண்ட கருங்கூந்தல் எனத் தொடங்கி நெற்றி, வாய், மூக்கு, புருவங்கள், கண்கள், காதுகள், கழுத்து, தோள்கள், விரல்கள், உள்ளங்கைகள், கொங்கைகள், கொப்பூழ், இடை, அல்குல், தொடைகள், முழங்கால்கள், கணைக்கால்கள், பாதங்கள், விரல்கள் என வரிசையாக வருணிக்கின்றார். விசயையின் கணைக்கால் அழகைத் திருத்தக்கதேவர்,

> ***"ஆடுதசை பிறங்காது வற்றாது மயிர்அகன்று***
> ***நீடாது குறுகாது நிகர்அமைந்த அளவினவாய்ச்***
> ***சேடுஆவ நாழிகையில் புடைதிரண்டு தேன்நெய்பெய்***
> ***வாடாத காம்பேபோல் கணைக்காலின் வனப்பினவே"***

*(சீவக.நாமகள்,பா.எண். 176)*

என்று வருணிக்கின்றார். கெண்டைத் தசை இடம்பெயராமலும், குறையாமலும் மயிர் நிறைந்து, நீளாமலும், குறுகாமலும் சமஅளவுடன் பெருமை தரும் அம்பினைப் போட்டு வைக்கும் அம்பறாத்தூணி போலத் திரண்டு தேனும் நெய்யும் பெய்து வைக்கும் வாடாத பச்சை மூங்கில் போன்று வளைந்து இருக்கும் என்று விசயையின் கணைக்கால் அழகைக் குறிப்பிடும் இடத்தில் திருத்தக்கதேவரின் வருணனைத்திறன் வெளிப்படுகின்றது. சீவகன் தக்க நாட்டின் தலைநகரம் கேமாபுரத்திற்கு வந்து அருகனைத் தியானித்து ஆலமரத்தடியில் இருந்தபோது சுபத்திரன் என்பவன் சீவகனைச் சந்திக்கின்ற இடத்தில் அவனழகைத் திருத்தக்கதேவர் (1460-1465) ஆறு பாடல்களில் வருணிக்கின்றார். சீவகனின் துடைகள், பிடரி, வாய் ஆகியனவற்றின் அழகினை வருணிக்கும்போது, துடைகள் மயிர் பொருந்தி அழகுடன் விளங்கியது. பிடரி இசையையுடைய முழவினைப் போன்றிருந்தது. வாய் வீரம் மிக்க புலியுனுடையதைப் போல் விளங்கியது என்கின்றார். அச்செய்யுள் வருமாறு:

> ***"குறங்கணி மயிரொடு கோலம் ஆர்ந்தன***
> ***பிறங்கிய உறுப்பின்மேல் பெரிய நோக்கின***
> ***கறங்கிசை மணிமுழா எருத்தம் காண்தகு***
> ***மறங்கெழு பெரும்புலி வாயின் வண்ணமே"***

*(சீவக.கேமசரி,பா.எண்.1461)*

சீவகன் துறவு மேற்கொள்ளப் போவதாகத் தன் மனைவியர்களை அழைத்துக் கூறுகின்றபோது அவர்கள் சீவகனின் அடிமுதல் முடிநோக்கி

அரற்றி அழுகின்றனர். இவ்விடத்தில் சீவகனின் உருவைப் பாதாதி கேசமாக (2946-2954) வருணிக்கின்றார். இலக்கியத்தில் பொதுவாக இறைவனின் உருவத்தையே பாதாதி கேசமாக வருணிக்கின்ற உத்தி மரபு காணப்படும் நிலையில் சீவகனை இறைவன் நிலையில் வைத்துப் பாதாதி கேசமாக வருணிக்கின்றார் திருத்தக்கதேவர். சீவகன் துறவு மேற்கொண்டு முத்தி நிலையை அடையப் போகின்றான் என்பதால் அவர் இவ்வாறு வருணித்திருக்கின்றார் எனக் கருத இடமுள்ளது. பெண்களைப் பற்றி மிகுதியாகப் பேசுகின்ற காப்பியம் சீவகசிந்தாமணி. காப்பியத்தில் சீவகன் எட்டுப்பெண்களை மணந்து தன் நண்பனுக்குக் கோவிந்தையை மணம்முடித்துக் கொடுக்கின்றான். அவர்கள் வருமிடங்களில் அவர்களைப் பற்றிய உருவ வருணனைகள் இடம்பெறுகின்றன. விமலையைக் கண்ட சீவகன் அவளழகில் மயங்குகின்றான். அதனைத் திருத்தக்கதேவர்,

***"கருங்குழலும் செவ்வாயும் கண்மலரும் காதும்***
***அரும்பொழுது பூண்முலையும் ஆருயிர்க்கே கூற்றம்***
***விருந்தினராய் வந்தாரை வெற்றுடலா நோக்கும்***
***பெருந்திருவி யார்மகள்கொல் பேரியதாங் கொல்லோ"***

***(சீவக.விமலை,பா.எண். 1969)***

கரிய கூந்தலும், செக்கச்சிவந்த வாயும் மலர்போன்ற கண்களும் காதுகளும் அரும்பினைப் போன்ற பொன்னணி பூண்ட முலைகளும் உடையவளாய் உயிருக்கு எமனாய் வந்தவள் இவளே எனச் சீவகன் நினைப்பதாகத் திருத்தக்கதேவர் குறிப்பிடுகின்றார். திருத்தக்கதேவர் தாம் பாடும் பொருளைப் பெண்ணாகப் பாவித்துப் பாடும் நிலையையும் காப்பியத்தில் காணமுடிகின்றது. நாட்டையும் பொய்கையையும் அகழியையும் மதிலையும் பெண்ணாகப் பாவித்து அவர் பாடியிருப்பது இதற்குச் சான்றாகும். அவர் பொய்கையைப் பெண்ணாகப் பாவித்து வருணிக்கின்றார். திரையே நுண் ஆடையாகவும், இருகரைப் பரப்பும் வயிற்றின் மேற்பகுதியாகவும், தாமரை முகமாகவும், குவளை கண்களாகவும் அமைந்தன என உருவகித்து வருணிக்கின்றார்.

***"கலந்தெழு திரைநுண் ணாடைக் கடிக்கய மடந்தை காமர்***
***இலங்குபொற் கலாபத்து அல்குல் இருகரைப் பரப்பு மாக***
***அலர்ந்ததண் கமலத்து அம்போது அணிதக்க முகத்திற் கேற்ப***
***நலங்கெழு குவளை வாட்கண் நன்னுதல் நலத்தை உண்டார்"***

***(சீவக.குணமாலை,பா.எண்.964)***

அவர் மதிலைக் கன்னியாகப் பார்க்கின்றார். மதிற் கன்னிக்கு அகழியே துகிலாக அமைகின்றது. அதைச்சுற்றி அமைந்துள்ள ஆளோடிகளாகிய பாம்புரிகளே மேகலையாகவும், மதில்மேல் உள்ள ஞாயிறே மார்பகங்களாகவும், கோபுரமே முகமாகவும், மதிற்கொடியே மயிர்முடியாகவும் அமைந்துள்ளது எனச் சுட்டுகின்றார். இக்கருத்தமைந்த பாடலாக,

***"அகழ்கிடங்கு அம்துகில் ஆர்ந்த பாம்புரி***
***புகழ்தரு மேகலை நாயில் பூண்முலை***
***திகழ்மணிக் கோபுரம் திங்கள் வாண்முகம்***
***சிகழிகை நெடுங்கொடி செல்விக் கென்பவே"***

(*சீவக.கேமசரி,பா.எண்.* 1444)

என்றும், இக்கருத்தையே அவர் மற்றொரு பாடலிலும் (105) குறிப்பிட்டுப் பாடுகின்றார். உட்பொருள் உணர்த்தியும், குறிப்புப்பொருள் உள்ளுறுத்தியும் வருணனைகளைத் திருத்தக்கதேவர் அமைத்திருக்கின்றார்.

**முடிவுரை**

இவ்வாறு திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியில் அமைத்துக் காட்டியுள்ள கற்பனை நயங்களும், வருணனைத் திறன்களும் இக்காப்பியத்தின் கதைப்போக்கினை வளர்த்துச் செல்லவும், காப்பியக் கட்டமைப்பைச் செறிவாக அமைக்கவும் பயன்படுகின்றது.

## மதுரையின் தங்கப் பூ

***நூற்றிதழ்த் தாமரை போல்***
***பூத்தசெந் தமிழே! என்றும்***
***நாற்றிசைத் தமிழர் காணும்***
***நம்பிக்கை ஒளியே! எங்கள்***
***ஆற்றல்சால் புலமை யாளர்***
***அறிவுக்கு நிதியே! சொல்நீ***
***நேற்றைக்கு வந்த தாளா?***
***நெடுங்குடி காக்கும் வாள் நீ!***

**– கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன்**

# சங்கச் செய்திகள்

02.01.2018 அன்று சங்க வளாகத்தில் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. முனைவர் பட்ட ஆய்வாளர் அ.ஜோதிமணி அவர்கள் தமது உரையில், "வரலாற்றுப் பேரறிஞர் என அறியப்படும் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் சிறுவயதிலேயே அறிவுக் கருவூலமாகத் திகழ்ந்தவர் என்றும், இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு ஆய்வு செய்தவர் என்றும், முழுமையான நாட்டுப்புறமாக இருந்த திருப்புறம்புயம் எனும் சிற்றூர் ஒன்றில் பிறந்து தமது ஆசிரியர்களின் தூண்டுதலால் ஆர்வம் பெற்றுத் தமது சொந்த முயற்சியில் கல்வெட்டுக்களை ஆராய்ந்து, மறைந்து கிடந்த வரலாற்று உண்மைகள் பலவற்றை வெளிப்படுத்தியதன் மூலம் தாம் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்த பெருமகனார் அறிஞர் பண்டாரத்தார்" என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

11.01.2018 அன்று சங்க வளாகத்தில் முனைவர் சுசீலா கோபாலகிருஷ்ணன் அவர்களின் படத்திறப்பு விழா முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் ம.திருமலை, பேரா.ம.பெ.சீனிவாசன், யாதவர் கல்லூரி தமிழ்த்துறைத்தலைவர் (ப.நி) இ.கி.இராமசாமி, மன்னர் துரைசிங்கம் கல்லூரிப் பேராசிரியர் கிளாட்சன் மற்றும் சிலர் தங்களது நினைவுரையில் முனைவர் சுசீலாகோபாலகிருஷ்ணன் அவர்கள் யாதவர் கல்லூரியில் பணியாற்றிய காலம் குறித்த நிகழ்வுகளையும், ஆராய்ச்சி வளர்ச்சியில் மைல் கற்களாக ஆய்வுகள் நிகழ்த்தி நூலாக்கம் செய்த சிறப்புக் குறித்தும் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வில் அன்னாரது குடும்பத்தினர், செந்தமிழ் மற்றும் பிற கல்லூரிப் பேராசிரியர்கள், தமிழார்வலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

11.01.2018 அன்று சோழவந்தான் அரசஞ்சண்முகனார் அவர்களின் நினைவேந்தல் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது. துணைமுதல்வர் கி.வேணுகா அவர்கள் தமது உரையில் "அரசஞ்சண்முகனார் அவர்கள் இலக்கிய இலக்கண நூற்களை ஆழ்ந்து

கற்றவர், திருக்குறளுக்குப் புதுவிளக்கம் தந்தவர், மேலைச் சிவபுரி சன்மார்க்கசபையைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியவர்" என்று குறிப்பிட்டார். முன்னதாக சோழவந்தான் அரசஞ்சண்முகனார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

12.01.2018 அன்று சங்க வளாகத்தில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரிச் செயலாளர் இராணி.ந.லட்சுமி குமரன்சேதுபதி அவர்களும் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்களும் விளக்கேற்றிப் பொங்கல் விழாவைத் தொடங்கிவைத்தனர். மாணவர்கள் பொங்கல் வைத்துக் கொண்டாடிச் சிறப்பு வழிபாடுகள் செய்து மகிழ்ந்தனர். இவ்விழாவில் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரிமுதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

17.01.2018 அன்று சங்க வளாகத்தில் சாமி சிதம்பரனார் மற்றும் கரிச்சான்குஞ்சு ஆகியோரின் நினைவேந்தல் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. முதலாம் ஆண்டு இளங்கலை மாணவர் அழகுவேல் அவர்கள் தமது உரையில், "தமிழறிஞர் சாமி சிதம்பரனார் தமிழ் மீது பெரும் பற்றுக் கொண்டவர், வித்துவான் பட்டம் பெற்ற பிறகு கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும் மற்றும் பல இடங்களில் தமிழாசிரியராகவும் பணியாற்றியவர், மாணவர்களுக்கு இனிய, எளிய முறையில் தமிழ் இலக்கணத்தைக் கற்பித்தவர், தாம் எழுதிய பல தகுதி வாய்ந்த நூற்களின் வாயிலாக இறந்தும் இறவாது வாழ்பவர்" என்று பலபடப் பாராட்டினார். முனைவர் பட்ட ஆய்வாளர் ந.யாகஜோதி அவர்கள் தமது உரையில் "நாராயணசாமி என்னும் இயற்பெயருடைய கரிச்சான்குஞ்சு தன்னுடைய இலக்கிய குருவாகவும் தந்தையாகவும் மதித்துப் போற்றிய கு.ப.ராஜகோபாலன் என்பாரின் புனைபெயரான 'கரிச்சான்' என்பதை முன்னிறுத்தித் தனது பெயரைக் கரிச்சான்குஞ்சு என எழுதத் தொடங்கியவர். சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு எனப் பன்முக ஆளுமையோடு இருந்தாலும் 'பசித்த மானிடம்' என்ற ஒரு *நாவலின் வீச்சுதான்* அவரை இலக்கியத்தின் பல தளங்களிலும்

இயங்குபவர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தது" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக சாமி சிதம்பரனார் மற்றும் கரிச்சான்குஞ்சு ஆகியோரின் திருஉருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

18.01.2018 அன்று முற்பகல் 10.30 மணியளவில் "கொரியாவும் தமிழ்நாடும்" என்ற தலைப்பில் சங்க வளாகத்தில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். தமிழ் வளர்ச்சித்துறை இணைஇயக்குநர் முனைவர் க.பசும்பொன் அவர்களும், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத் துறைத்தலைவர் (பொறுப்பு) முனைவர் உ.கருப்பத்தேவன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். மலேசியாவில் தமிழ் மரபு அறக்கட்டளைத் தலைவர் பேராசிரியர் நா.கண்ணன் அவர்கள் கொரியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான வணிக, பண்பாட்டு மற்றும் மொழித் தொடர்புகள் குறித்து விளக்கிப் பேசினார். துணைமுதல்வர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும், முனைவர் மா.செல்வத்தரசி நன்றியுரையும் வழங்கினர். உதவிப் பேராசிரியர்கள், நூலகர், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

26.01.2018 அன்று காலை சங்க வளாகத்தில் குடியரசு தினக் கொடியேற்று விழா நடைபெற்றது. செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரிப் பேராசிரியர் (ப.நி) க.செயமூர்த்தி அவர்கள் கொடியேற்றினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி, செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியின் தலைவர் வழக்குரைஞர் திரு.ச.தசரதராமன், செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் (ப.நி) பொன்விசயன், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

29.01.2018 அன்று முற்பகல் 11.00 மணியளவில் "புலம்பெயர்ந்தோர் தமிழ்" என்ற தலைப்பில் சங்க வளாகத்தில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். தமிழ் வளர்ச்சித்துறை இணைஇயக்குநர் முனைவர் க.பசும்பொன் அவர்களும் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ் கலை

மற்றும் அறிவியல் கல்லூரியின் நூலகர் மற்றும் நூலகத் தகவல் அறிவியல் துறைத் தலைவர் (ப.நி) முனைவர் ந.முருகேசபாண்டியன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். பிரான்சில் வாழ்ந்து வரும் புதுச்சேரியைச் சேர்ந்த எழுத்தாளர் நாகரத்தினம் கிருஷ்ணா அவர்கள் புலம்பெயர்ந்தோரின் மொழிச் சிக்கல்கள் குறித்து விவரித்தார். பின்னர் மாணவர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. துணைமுதல்வர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும், உதவிப் பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி நன்றியுரையும் வழங்கினர். உதவிப் பேராசிரியர்கள், நூலகர், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

30.1.2018 அன்று சங்க ஆட்சிக்குழு உறுப்பினர், முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அன்னாருக்கு அவரது இல்லத்தில் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செந்தமிழ் இதழ் பதிப்பாசிரியர் பேரா.சதாசிவம் துணைமுதல்வர் கி.வேணுகா ஆகியோர் பொன்னாடை போர்த்திச் சங்கம் மற்றும் கல்லூரியின் நிர்வாகக்குழு சார்பாக வாழ்த்துத் தெரிவித்தனர்.

30.01.2018 அன்று 'மலேசியக் கவிக்குயில் கலியபெருமாள் - உலகநாயகி அறக்கட்டளை' சார்பாகச் சங்க வளாகத்தில் சொற்பொழிவு முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது. சங்கச்செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். உதவிப் பேராசிரியர் முனைவர் அ.நந்தினி அவர்கள், "வாழ வழிகாட்டும் வள்ளலார்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில், "வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்கப் பாடுபட்ட அருளாளர்; ஆன்மீகவாதி; சத்திய ஞான சபையை நிறுவியவர்; திருவருட்பாவை அருளியவர்; மூலிகைகளைக் கொண்டு நோய் தீர்த்த சித்த மருத்துவர்; பொன்னாசை அற்றவர்" என்று குறிப்பிட்டார். மேலும் வள்ளலார் வழங்கிய அறிவுரைகளை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இளங்கலை இரண்டாமாண்டு மாணவர் அதிவீரபாண்டியன் வள்ளலாரின் ஆன்மநேயம் குறித்துக் கவிதை வாசித்தார். துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும் உதவிப் பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி நன்றியுரையும் வழங்கினர். உதவிப் பேராசிரியர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி தொகுத்து வழங்கினார். முன்னதாக அருட்பெருஞ்சோதி வள்ளலார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு

மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.


31.01.2018 அன்று முற்பகல் 11.30 மணியளவில் அகிலன் அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. நூலகர் தி.பிருந்தா அவர்கள் தமது உரையில் "1950 முதல் 1980 வரையிலும் அகிலனது எண்ணற்ற சிறுகதைகள் இதழ்களில் வெளிவந்தன என்றும் அகிலன் ஒரு சிறுகதையாளராகத் தன்னுடைய எழுத்து வாழ்க்கையைத் துவக்கிப் பின்னர் நாவலாசிரியராகவும் ஆனவர், இரு வேறுபட்ட இலக்கிய வடிவங்களிலும் திறமையுடன் விளங்கிய மிகச்சிலருள் அகிலனும் ஒருவர். உலக இலக்கியத்தைத் தமிழுக்கு மொழிபெயர்த்தவர், அவரது படைப்புகள் பல இந்திய மொழிகளிலும், அயல்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன, தமிழ் உலகத்திற்கு இலக்கியத்தின் மூலமாகப் பண்பாட்டினைத் தனது படைப்புகள்தோறும் வலியுறுத்திய அகிலனைப் போற்றுவோம், வாசிப்பின்வழி அவரைப் புரிந்து கொள்வோம்" என்று குறிப்பிட்டார். முன்னதாக அகிலன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

**அல்லி வட்டம்**

*நெல்நிறை நாழி போலும்*
*நெஞ்சினில் தமிழ்நி றைத்த*
*பல்துறைச் சான்றோர் சேர்ந்து*
*பாங்குடன் தமிழை ஆய*
*வெல்திற ஆற்ற லோடு*
*விளங்கிடு மாறு கண்ட*
*தொல்வர லாற்று மாம*
*துரைத்தமிழ்ச் சங்கம் வாழ்க!*

**- அ.ஜெயகாண்டீபன்**

## மார்ச் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



கா.நமச்சிவாய முதலியார்
(மார்ச்.13)



ந.மு.வேங்கடசாமி நாட்டார்
(மார்ச். 28)



தமிழ் ஒளி
(மார்ச்.29)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

### ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

| | |
|---|---|
| முனைவர் திரு. **அ.அ.மணவாளன்** | முனைவர் திரு. **தி.முருகரத்தனம்** |
| முனைவர் திரு. **இராம.சுந்தரம்** | முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்** |
| முனைவர் திரு. **ம.திருமலை** | முனைவர் திரு. **மு.மணிவேல்** |
| முனைவர் திரு. **இ.மறைமலை** | முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்** |
| முனைவர் திரு. **செ.கந்தசாமி** | முனைவர் திரு. **இ.கி.ராமசாமி** |
| முனைவர் திரு. **பெ.சுயம்பு** | முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்** |

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

# செந்தமிழ்க் கல்லூரி வைரவிழா



**(1957-1958) - (2017-2018)**

வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களால் 1901ஆம் ஆண்டு மதுரையில் தோற்றுவிக்கப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக **"சேதுபதி செந்தமிழ் கலாசாலை"** தொடங்கப்பட்டது. மாணவர்களுக்கு உண்டி, உடை, உறையுள் முதலியன வழங்கி, தமிழ்க்கல்வி பயிற்றுவிக்கும் கல்விக் கூடமாக "சேதுபதி செந்தமிழ் கலாசாலை" விளங்கியது. பின்பு 1957ஆம் ஆண்டு முதல் **செந்தமிழ்க் கல்லூரி** என்ற பெயரில் அரசு நிதி உதவி பெறும் கல்லூரியாக நடைபெற்று வருகிறது. 2003ஆம் ஆண்டில் தமிழ் உயராய்வு மையமாக உயர்ந்தும், தமிழ் இலக்கியத்தில் இளங்கலை, இளம் இலக்கியம், முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் ஆகியவற்றைப் பயிற்றுவிக்கும் தமிழுக்கான தனிக்கல்லூரியாகச் சிறந்தமுறையில் செயல்பட்டுவருகிறது. இத்தொன்மை வாய்ந்த செந்தமிழ்க் கல்லூரி தொடங்கப்பட்டு 60 ,ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி **"வைரவிழா"** வருகின்ற 2018 மார்ச் மாதம் 17, 18ஆம் தேதிகளில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பட்டிமன்றம், கவியரங்கம், நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளுடன், தமிழறிஞர்களின் பங்கேற்போடும் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்

அனுப்புநர்,
**செயலாளர்**
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1